
சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 6	இதழ்: 04	செப்டம்பர் - 2024	விலை - ரூ.15/
VOL:6	ISSUE: 04	September - 2024	Rs. 15/-





"மெய்ஞானி" பட்டினத்தடிகள்

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அரிய

பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-6 மலர்-04 செப்டம்பர்-2024

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே....

உனது கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கண்ணீர் மல்க பிரார்த்திக்கின்றாயே, உனது கோரிக்கைகள் இன்னதென்று நான் அறிய மாட்டேனா என்ன? ஏன் அழுது புலம்புகிறாய்.

ஒன்றை மட்டும் ஞாபகத் தில் வைத்துக்கொள். உனக்கு விதிக்கப்பட்ட கோரிக்கை களை மட்டுமே நான் நிறைவேற்று கின்றேன். உனக்கு சம்பந்தம் இல்லாத கோரிக்கைகளை நான் எப்படி நிறைவேற்ற முடியும்.

அப்படி நான் நிறைவேற்றாத கோரிக்கைகளே உன் வாழ்க் கையில் நடைபெறாத கோரிக்கை களாக இருக்கின்றன. அவை உனக் குண்டானவை அல்ல என்பதை புரிந்து கொள். எனவே அவற்றை விட்டுத் தள்ளு!

உனக்குண்டானவைகளை இந்த உலகமே எதிர்த்தாலும் உனது தந்தையாகிய நான் உனக்குத் தருவேன். கவலைப்படாதே! நான் தருவேன் என்பதில் நம்பிக்கை யாயிரு! நான் கொடுக்கும் வரை பொறுமையாயிரு!

உன் வாழ்கையை சிறப்பானதாக மாற்றுவது என் பொறுப்பு. நீ கவலை. படுவதை நிறுத்து. உன்னை எங்கே உயர்த்த வேண்டுமோ அங்கே கண்டிப்பாக உயர்த்தி உட்கார வைப்பேன். அதுவரை அமைதியாக இரு..

-பகவான் சீரடி சாய்பாபா.

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் அருளால் எழுபத்தி நான்காவது இதழ் மூலம் சாயி சொந்தங்களாகிய உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா, மற்றும் 7 ஆம் ஆண்டு துவக்க விழா, ஆசிரியரின் "குருவைத் தேடி" தனிப் பத்தகம் வெளியீட்டு விழா என முப்பெரும் விழாவாக, 11.08.24 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சென்னை அயனாவரம், இராமலிங்க சுவாமி சன்மார்க்க சத்திய சங்க திருக்கோவிலில் மிகப் பிரமாண்டமாக நடைபெற்றது.

காலை 9 மணிக்கு இறை வணக்கத்துடன் விழா தொடங்கியது. மணியம் 12 மணிக்கு, வாழும் பாபா திரு. சீரடி ஸ்ரீ அச்சுதானந்த சுவாமிகளின் தலைமையில் புத்தக வெளியீட்டு விழா துவங்கியது. இம்மாத புத்தகத்தையும், குருவைத் தேடி புத்தகத்தையும் ஸ்ரீ அச்சுதானந்த சுவாமிகள் அவர்கள் வெளியிட, ஆசிரியரின் தாய் திருமதி. இந்திரா வெங்கடாச்சலம் அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாவில், "பாரயணப்பகலவன்" திரு. சுந்தர்சாய் அவர்கள், "பிரார்த்தனைச் செம்மல்" திரு. சாய் கலியன் அவர்கள், திரு.குருவருள்





வேண்டி அசோக்குமார் அவர்கள், திருமதி சுனந்தா அவர்கள், திருமதி. மாதங்கி பாலாஜி அவர்கள், திரு. வேணுகோபாலன் அவர்கள், பெங்களூர் திரு. பிரசாத் அவர்கள், அவர்கள், திரு. உதி.மூர்த்தி அவர்கள், திரு. இராமமூர்த்தி அவர்கள், திரு. சாந்திரன் அவர்கள், கோபுரம் டி.வி திரு. பிரசாத் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழாவில் நூற்றுக்கணக்கான சாயி பக்தர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் காலை சிற்றுண்டியும், மதியம் அன்ன பிரசாதமும் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை சிறப்பாக கவனித்த சாய் தியானாலயா ஆத்ம ஞான குழுவினர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றிகள்.



சாய் பகவானைப்பற்றி பலர் பலவிதங்களில் வலைத்தளங்களில் தவறாக பேசிவருவதை நீங்கள் பார்க்கின்றீர்கள். பார்த்தும் உங்கள் எதிர்ப்பை பதிவு செய்வதில்லையே ஏன் என்று "வாழும் பாபா" திரு. அச்சுதானந்த சுவாமிகள் சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் எங்களிடம் கேட்டார்.

அதற்கு காரணம், பல காலமாக பாபா பக்தியை மக்களிடம்

எடுத்துச் செல்பவர்களுக்கு பாபாவைப் பற்றி சரியான புரிதல் இல்லாததே காரணம் என எண்ணத்தோன்றுகின்றது. பாபாவின் கதைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் உள்ளவர்கள் பாபா தனக்கு மட்டுமே சொந்தமானவர் என்பது போன்றும், தன்னிடம் மட்டுமே



பாபா பேசுகின்றார், தான் அழைத்தால் தான் பாபா வருவார் என்பது போன்ற நடவடிக்கைகளையே பக்தர்களிடம் காட்ட விரும்புகின்றனர்.

இந்தமாதிரியான சுயநலமான பக்தி, பாபாவின் உண்மையான அவதார நோக்கம் பக்தர்களிடையே சென்று சேரவிடாமல் தடுக்கின்றது. மேலும் பாபாவினுடைய அவதாரத் தத்துவம் இன்னதென்று மிகச்சரியாக பக்தர்கள் அறிந்து கொண்டாரில்லை.

பின்பு எப்படி தன்னை நோக்கி வரும் கேள்விகளுக்கு பதில் கொடுப்பார்கள். ஆகவே பகவான் சாயிநாதரைப்பற்றி கண்டவர்களும், கண்டதையும் பேசுவதை நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டுதானே இருக்க முடியும்.

இதுபோன்ற கயவர்களுக்கு நாம் பதிலடி கொடுக்க வேண்டுமானால், பாபா நமக்கு போதித்த முழுமையான ஞான மார்க்கத்தை கடைபிடிக்க வேண்டும்.“என்னை நம்பியவர்களுக்கு ஆறு விதமான சாஸ்திர சம்பிரதாயங்கள் தேவையில்லை” என்ற வாக்கையும், “ எதைப் பிடித்தாலும் இறுக்கிப்பிடி” என்ற வாக்கினையும் ஆழமாக சிந்தித்துப் பாருங்கள். உலகை உய்விக்க வந்த பேராற்றலாகிய பகவான் சாயிநாதரின் அவதார நோக்கம் நன்கு புரியும்.

நாமும் பாபாவைப் பற்றி தவறாகப் பேசும் நபர்களுக்கு உடனடியாக பதிலடி கொடுக்க முடியும்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலகமாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்சமின்றி ஆரோக்கியத்துடன், மனநிம்மதியுடனும், வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்.

ஓம் சாய்ராம்.

நலமுடன் வாழ்வோம்



சாய் அன்பர்கள் அனைவருக்கும் வணக்கம்! நமது அன்றாட வாழ்வில் அல்லல்கள் அனேகம். கோடிப் பிரட்சனைகள் இருப்பினும் தீர்வு ஆன்மீக வாழ்வில் மட்டுமே உள்ளது. என்பது ஆண்டுகள் ஸ்தூல உடலுடன் வாழ்ந்து, இன்றளவும் நமக்கெல்லாம வழித்துனையாய் வலம்வரும் பிரபஞ்ச மகா சக்தி ஸ்ரீ சாயி மகராஜ் நமக்களித் ஓர் எளிய மகா மந்திரம்...

" ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்"

மிக எளிமையான இம்மந்திரத்தை எழுதிக்கொண்டே ஜபிப்போமானால் நம் தலையெழுத்தையே மாற்றி அமைக்க வல்லது.'**லிகித**' என்றால் எழுதுவது "இந்த லிகித நாம ஜபத்"தை தினமும் 108 முறை உச்சரித்துக் கொண்டே எழுதி, நம் கர்மவினையின் தாக்கத்தை முறியடிப்போம் வாரீர்.

ஆர்வத்துடனும், பக்தியுடனும், எழுத, எழுத பிரபஞ்ச மஹா சக்தியானது பேரருளாய் மலர்ந்து நம் வாழ்வினில் மன நிம்மதியையும், முன்னேற்றத்தையும் வழங்கும். என்றென்றும் குருவருள் திருவருளாய் திகழ்ந்திட சாயிநாமம் சொல்லிக் கொண்டே வாழ்வில் வளம் பெருவோம்

எக்கும் சாய்! எதிலும் சாய்!
எல்லாமே சாய்! குருவே துணை!

விபரங்களுக்கு:

"பாராயணப் பகலவன்"

திரு. சுந்தர்சாய், 9789404451

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

ஒருமுறை அன்புச்சகோதரி புவனா அவர்கள் தனது சகோதரன் அவர்களுக்கு நல்ல இல்வாழ்க்கை அமைய வேண்டும் என்று குருவிடம் பிரார்த்தனை வைத்தார். குருவும் சகோதரர் சாந்தமூர்த்தி அவர்களுக்காக கூட்டுப்பிரார்த்தனை செய்தார்.

சாயியிடம் கேட்டு கிடைக்காதது என்று ஏதாவது உண்டா என்ன? அவர் கொடுத்து நாம் வேண்டுமானால் உதாசீனம் செய்திருக்கலாமே அன்றி அவர் ஒருபோதும் தன் பக்தன் கேட்டதை கொடுக்காமல் இருந்தது இல்லை.

சாந்தமூர்த்தி அவர்களுக்கு ஒருசில மாதங்களிலேயே பாஞ் சாலி என்ற நல்ல மணப்பெண் கிடைக்க குருவின் தலைமையில் சிறப்பாக திருமணம் நடைபெற்றது. காலங்கள் செல்ல, தம்பதியினருக்கு குழந்தைவரம் வேண்டி பிரார்த்திக் கப்பட்டது.

விரைவிலேயே மணப்பெண் கர்ப்பம் அடைந்தார். அவர்களது வளைகாப்பு நிகழ்ச்சி பாபா சங்கல்பத்தின்பேரில் நமது சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தில் நமது குருவின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அதை பாபா எங்களுக்கு அளித்த கவுர மாக எடுத்துக் கொண்டோம்.

பகவான் சாயிநாதரின் அருளால் அழகிய பெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு குரு அவர்கள் "சாய்னி" என்று பெயரிட்டார்கள். பலமுறை குடும்பம் சகிதமாக சீரடிக்கு புனிதப் பயணம் செய்து சாயிபாபாவிற்கு நன்றி செலுத்து கின்றார்கள்.

திரு. சாந்தமூர்த்தி தம்பதியினர் பகவான் சாயிநாதரின் மேல் அளவற்ற நம்பிக்கை வைத்திருக் கின்றனர். அவர்கள் வாழ்வில் நடக்கும் அனைத்து காரியங் களுக்கும் சாயிநாதரையே நம்பி யிருக்கின்றனர்.


கடந்த எட்டு வருடமாக நமது குருநாதர் ஞாயிறு தோறும்



- ஜெயந்தி ஸ்ரீராம்

நிகழ்த்தும் சத்சங்கத்திலும், தியானத்தில் தவறாது கலந்து கொண்டு வருகின்றார் சாந்தமூர்த்தி அவர்கள். இதுவரை ஒருநாள் கூட அவரது தேவையை வாய் திறந்து குருவிடம் கூறியதில்லை.

குரு நிகழ்தும் சத்சங்கத்தை உன்னிப் பாக கவனித்துக் கொண் டிருப்பார். இதுபோன்ற பக்தர்களின் தேவையை அவர்கள் கேட்காமலே நிறைவேற்றுவார் பாபா என்பதைநான் கண்கூடாக கண்டிருக்கின்றேன்.



திரு. சாந்தமூர்த்தி பாஞ்சாலி தம்பதியினரும், செல்லக்குழந்தை சாய்னி மற்றும், அவர்களது குடும்பத்தினர் அனை வரும் பகவான் சா யிநாதரின் அருளால் மேன்மேலும் நல்ல வளர்ச்சியடைந்து நல்ல உடல் நலத்தோடும், மனவளத்தோடும், பொருளாதார வளத்தோடும் வாழ்வாங்கு வாழ்க வளமுடன் என்று பகவான் சாயிநாதரை பிரார்த்திக்கின்றோம்.

அடுத்து ஒரு சகோதரியின் கதை யினையும் தெரிந்து கொள்வோம்.

நமது சபைக்கு அருகில் வசிக்கும் திருமதி. கிருஷ்ணவேணி என்ற சகோதரி ஒருமுறை நமது குருவை சந்தித்து அவரது குடும்பக்கதையை விவரித்தார். சிறுவயதில் அவருக்கு விருப்பம் இல்லாமல் அவரது மாமன் மகனை திருமணம் செய்து வைத்திருக்கின்றார்கள்.

கணவனோ மது அடிமை. பலவித கஷ்டங்களுடன் வாழ்க் கையை ஓட்டியிருக்கின்றாள். வரிசையாக இரண்டு பெண் குழந் தைகளை பெற்றபின் மாமியா ரின் கொடுமைகள் வேறு. இரண்டு பக்கமும் நெருங்கிய உறவினர்கள் என்பதால் எந்தப்பக்கமும் செல்ல முடியவில்லை அனுசரித்துப்போ என்ற அறிவுரைதான் அதிகமாக கேட்டிருக்கின்றாள்.

வாழ்க்கை துன்பத்திற்கிடையே தனது இரண்டு பெண்குழந்தை களை நன்றாக படிக்க வைத்து

ஆளாக்கி விட வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டிருக்கின்றாள். எப்படியோ தன் தலைவிதியை நொந்தபடி வாழ்க்கையை ஓட்டியவளுக்கு ஆபத்தாந்தவனாக அவளது வாழ்க்கையில் பாபா வந்திருக்கின்றார்.

துன்பங்களை மறக்க எப்போதும் சாயி பஜன், சாயி கதைகள் என்று காலத்தை ஓட்டியிருக்கின்றாள். குழந்தைகள் வளர்ந்து ஆளானதும் தங்களது தாய், தந்தையிடம் படும் சித்தரவதைகளைக் கண்டு மனம் கலங்கியிருக்கின்றனர்.

குழந்தைகள் வளர்ந்துவிட்டார்களே என்ற நினைவு கூட இல்லாமல் அவளது கணவன் தினமும் குடித்துவிட்டு வந்து குழந்தைகள் முன்பு அவளைப் போட்டு அடிப்பதும், திட்டுவதுமே தினசரி வாடிக்கையாக இருந்திருக்கின்றது.

பலதினங்கள் கணவனின் கொடுமைகளுக்கு ஆளாகி மனம் வருத்தப்பட்டு, இந்தக் குழந்தைகளை மட்டும் எப்படியாவது நன்றாகப் படிக்க வைத்து பெரியாளாக்கிவிட வேண்டும் என்று பாபாவிடம் முறையிடுவாளாம். ஆனால் தங்களின் தாய் படும் துன்பங்களைக்கண்ட இரண்டு குழந்தைகளும் மன இறுக்கத்திற்கு ஆளாகியிருக்கின்றனர்.



அதிலிருந்து இரண்டு குழந்தைகளும் யாரிடமும் சரிவரப் பேசாமல், பழகாமல் இருந்ததனால் அவர்களது படிப்பும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. பரிதவித்துப் போன சகோதரி குழந்தைகளை அழைத்துக்கொண்டு கோவில் கோவிலாக சுற்றி வந்திருக்கின்றாள். ஒரு மாற்றமும் இல்லை. குழந்தைகள் மேலும் மேலும் மன இறுக்கத்திற்கு ஆளானதுதான் மிச்சம்.

முடிவாக, ஆனது ஆகட்டும். இனி எனக்கும் என் குழந்தைகளுக்கும் நீயே கதி! வாழ்ந்தாலும், வீழ்ந்தாலும் நீ மட்டும்தான் என்ற ஒரே சிந்தனையுடன் பாபாவையே இறுகப் பிடித்திருந்திருக்கின்றார்.

அப்போதுதான் குரு அவர்கள் அவர்களது வீட்டின் அருகே சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம் அமைத்திருக்கின்றார். மறுநாள் அதிகாலையில் கண்விழித்த சகோதரி மாடியில் இருந்து எதிரே பார்க்க பாபாவின் படத்துடன் நமது பீடத்தின் விளம்பர பேனர் கண்களில் பட்டிருக்கின்றது.

சரி! பாபா நமக்கு வழிகாட்டுகின்றார் என்று நினைத்த சகோதரி ஒரு நாள் தனது இரண்டு குழந்தைகளுடன் குருவிடம் வந்து தனது குறைகளை பாபாவிடம் பிரார்த்திக்குமாறு முறையிட்டாள். குருவும் அவர்களுக்கு ஆறுதல் கூறி குழந்தைகளின் மன இறுக்கத்தில்

இருந்து வெளிவர தியானத்தில் கலந்து கொள்ளும்படி ஆலோசனை கூறினார்.

அந்த சகோதரியும் தன் குழந்தைகள் எப்படியாவது நல்ல நிலைக்கு வர வேண்டும் என்று தவறாமல் தியான வகுப்பிற்கு அனுப்பிவைத்தார். மெல்ல, மெல்ல குழந்தைகள் இருவரும் குருவின் சத்சங்கத்தில் மிகவும் ஆர்வமாக கலந்து கொண்டு தியானப் பயிற்சி செய்து வந்தனர்.

காலப்போக்கில் அவர்களிட மிருந்த மன இறுக்கம் அகன் றோடியது. சாயிபாபாவின் கதைகளைக் கேட்டு, கேட்டு பாபாவின் மீது பக்தி கொண்டு சாயி பஜன் செய்யுமளவிற்கு முன்னேறினர். குரு அவர்கள் நிகழ்த்திய மவுனம் நிகழ்ச்சியில் முழுமையாக கலந்து கொண்டு அனைவருடைய பாராட்டுக் களையும் பெற்றனர்.

காலம் ஓடியது. அவர்களு டைய பெரிய பெண் கல்லூரி யில் முதல் மாணவியாக தேர்ந் தெடுக்கப்பட்டாள், நல்ல வேலை கிடைத்தால் தன் முதல் மாத சம்பளத்தை பாபாவின் அன்ன தானத்திற்கு காணிக்கையாக தருவ தாக குருவிடம் கூறி பிரார்த்தனை வைத்தாள்.

கல்லூரியின் மூலமாகவே நல்ல வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு ஐதராபாத்திற்கு வேலைக்குச் சென்றாள். அவள் பிரார்த்தனை செய்தபடி முதல் மாத சம்பளம் வாங்கியதும் குருவிடம் வந்து காணிக்



கையை அளித்து ஆசி பெற்றாள்.

இன்று அவள் விரும்பிய மண மகனையே பாபாவின் ஆசியோடு திருமணம் செய்து கொண்டு இரண்டு ஆண்குழந்தைகளையும் பெற்றுக் கொண்டு ஆனந்தமாக ஐதராபாத்தில் வசிக்கின்றாள். சிறிய பெண் தற்போது கல்லூரியில் இறுதி ஆண்டு படித்துவருகின்றாள்.

கடுமையான மன இறுக்கத்திற்கு ஆளாகியிருந்த தன்னுடைய பெண்களின் இந்த பரிபூரணமான மாற்றத்திற்கு பகவான் சாயிநாதரே காரணம் என்பதில் மறுக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ள அன்புச்சகோதரி கிருஷ்ணவேணி அவர்கள், தன்னுடைய குடும்ப முன்னேற்றத்திற்கு வழிகாட்டிய குரு அவர்களை அடிக்கடி வந்து சந்தித்து மனதார நன்றிகூறிச்செல்கின்றார்.

அடுத்த மாதம் இன்னும்சில சகோதரிகள் வாழ்வில் நிகழ்ந்த சாயி லீலைகளை பகிர்ந்து கொள் வோம்.

குரு வாழ்க! குருவே துணை!


– வே.ஸ்ரீராம்

சாய் சரிதம்-6

கதை வழியில்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதைபதைப்பு மறைந் தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

– ஸ்ரீ சீரடி சாய்பாபா



சாயி ஓர் முழுமையான சித்தர் என்பதை சீரடி மக்கள் உணர்ந்து கொண்ட தருணம் எது என்று ஹேமாட்பந்த் கேட்டதற்கு மகல்சாபதி அதற்கு ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று சம்பவங்களைக் கூற வேண்டும் என்று கூறியவர், முதல் சம்பவத்தை கூறிவிட்டு, இரண்டாவது சம்பவத்தை கூறத்தொடங்கினார்.

சாயிபாபாவிற்கு தீபங்கள் ஏற்றுவது என்றால் மிகவும் விருப்பம். சீரடியில் செக்குகளில் எண்ணெய் ஆட்டி விற்பனை செய்யும் வியாபாரிகள் சிலர் இருந்தனர். பாபா அவர்களிடம் சென்று விளக்கு ஏற்ற எண்ணெய் கேட்டு வாங்கிவருவார். செக்கு ஆட்டும் வியாபாரிகள் கொஞ் சகாலம் இலவசமாக பாபாவிற்கு எண்ணெய் கொடுத்து வந்தார்கள்.

காலப்போக்கில் எண்ணெய்

வியாபாரிகள் ஒன்றுகூடி, இந்த பக்கிரி தினந்தோறும் நம்மிடம் இலவசமாக எண்ணெய் வாங்கிச் செல்கின்றான். வாங்கிச்செல்லும் எண்ணெய்யை உணவிற்கு பயன் படுத்துகின்றானா என்றால் இல்லை. அவ்வளவு எண்ணெய்யை யும் விளக்கு எரிக்கவே பயன்படுத்து கின்றான்.

இதைப்பார்க்கும் மக்கள் என்ன நினைப்பார்கள். இவர்கள் ஆட்டும் எண்ணெய் உணவிற்கு பயன்படாது. விளக்கு எரிக்கத்தான் பயன்படும் என்று நினைக்க மாட்டார்களா? அதனால் நம் வியாபாரம் பாதிக்கப்பட்டால் நாம் என்ன செய்வது. ஆகையால் இனிமேல் அந்தப் பக்கிரிக்கு நாம் யாரும் இலவசமாக எண்ணெய் கொடுக்கக் கூடாது என்று முடிவெடுத்தார்கள்.

மறுநாள் வழக்கம்போல் பாபா அவர்களிடம் எண்ணெய் கேட்கப் போனபோது, அவர்கள் எல்லோரும் ஒரே தீர்மானமாக எண்ணெய் இல்லை என்று கூறி விட்டனர்.

எண்ணெய் வியாபாரிகளின் இந்த செயலை பாபா முன்பே எதிர் பாத்ததுபோல் கொஞ்சமும் முகம் சுளிக்கவில்லை. வியாபாரிகளைப் பார்த்து புன்னகை புரிந்துவிட்டு மசூதிக்கு திரும்பிய பாபா துணிகளை கிழித்து திரிகளாக்கி, மண் விளக்குகளில் இட்டார்.

அதேசமயம், பாபாவிடம் விளக்கு ஏற்ற எண்ணெய் இல்லை



என்று கூறிய வியாபாரிகள் ரகசியமாக மசூதிக்கு வந்து பாபா எப்படி எண்ணெய் இல்லாமல் விளக்கேற்றுகின்றார் என்று ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்தனர்.

பாபா எண்ணெய் வாங்கும் தகரக்குவளையை எடுத்து அதில் இருந்த கொஞ்ச எண்ணெய்யில் தண்ணீரை ஊற்றி கலக்கி குடித்தார். பிறகு அதே குவளையில் தண்ணீரை மொண்டு எல்லாவிளக்குகளிலும் தண்ணீரை நிரப்பினார்.

பிறகு நிதானமாக ஒரு விளக்கை ஏற்றி அதன் மூலம் எல்லா விளக்குகளையும் ஏற்றிவைத்தார். தண்ணீரில் ஏற்றப்பட்ட விளக்குகள் மசூதி முழுவதும் ஜெகச்சோதியாய் ஒளிர்ந்தன. இந்நிகழ்வு மறைந்து நின்று கவனித்துக்கொண்டிருந்த வியாபாரிகளுக்கு பயத்தையும், ஆச்சர்யத்தையும் ஏற்படுத்தின.

பாபா முதல்நாள் இரவு தண்ணீரில் ஏற்றிவைத்த விளக்குகள் அனைத்தும் அன்று இரவு முழுவதும் எரிந்தன. வியாபாரிகள் அனைவரும் தங்கள் செயலுக்கு மனம் வருந்தி பாபாவிடம் தங்களை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டனர்.

பாபா அவர்களை மன்னித்து, இது போன்ற காரியங்களை இனி எப்போதும் செய்யாதீர்கள். ஒருவருக்கு செய்யும் உதவியால் நமக்கென்ன லாபம் வரும் என்று பார்க்காதீர்கள். அதிலும், இறைவனுக்கு செய்யும் சேவைகளில் குறை வைக்காதீர்கள் நீங்கள் மனம் உவந்து இறைவனுக்கு செய்யும் சிறிய சேவை உங்களுக்கு பலமடங்காக திரும்பி வரும் என்பதை மறவாதீர் என்று கூறினார்.

இதுவே இரண்டாவது சம்பவம், மூன்றாவதாக மறக்கமுடியாத சம்பவம் அது எனக்கே நடந்தது. முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால், ஒரு மார்கழி மாதத்து முழு பௌர்ணமி நாள். இரவு பத்துமணி இருக்கும்."பகத்" என்னருகே வா" என்று பாபா என்னை அழைத்தார்.

நான் அவரருகே சென்றேன். பாபா என் கையைபிடித்து அவரருகே அமரவைத்து, "பகத் நான் இறைவனை சந்திக்கப்போகின்றேன். மூன்று நாட்களில் திரும்பி விடுவேன். ஒருவேளை நான் திரும்பாவிட்டால், இதோ இந்த மசூதிக்கு எதிரில் என் உடலைப் புதைத்து அடையாளத்திற்கு ஒரு கொடியை நட்டுவைத்துவிடு என்றார்.

திடீரென என்னை அழைத்து பாபா இப்படிக்கூறியதும் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என் கைகால் நடுங்க ஆரம்பித்தன. பாபா நீங்கள் என்ன கூறுகின்றீர்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லையே என்றேன்.

பாபா நிதானமாக, புரியவில்லை என்றால் பரவாயில்லை. உனக்கு என் வார்த்தைகள் மீது நம்பிக்கை இருக்கின்றதா இல்லையா? என்றார்.

என்ன பாபா அப்படிக் கேட்டு விட்டீர்கள் உங்கள் வாக்குகளை நான் வேத வாக்காக அல்லவா நம்பிக்கை வைத்துள்ளேன்.

என்மீது அப்படிப்பட்ட நம்பிக்கை உனக்கிருந்தால் நான் கூறுவது உனக்கு புரிந்தால் என்ன? புரியாவிட்டால் என்ன?

'உண்மைதான் பாபா' என்றேன் நான்!.

அப்படியானால் நான் கூறுவதைக் கவனமாகக் கேள். நான் மூன்று நாட்கள் யோக நித்திரை கொள்ளப் போகின்றேன். நான் மீண்டும் வரும்வரை என் உடலை விட்டு நீ நீங்காதிருக்க வேண்டும்.

என் உடல் அசைவற்றுப் போனபின்பு இந்த உலகம் என்ன பேசுகின்றது, எப்படி நடந்து கொள்கின்றது என்பதை கவனித்து வைத்துக்கொள். நமக்குப் பின் வருபவர்களுக்கு அது மிகவும்



உதவும் என்ற பாபா நான் திரும்ப வரும் வரை என் உடலை பத்திரமாக காத்திருக்கும் "பொறுமை" உனக்கு இருக்கின்றதா? என்றார் பாபா.

என் தேவா, என்னை ஏன் இப்படி சோதிக்கின்றீர்கள். உங்கள் விளையாட்டிற்கு இன்று நான் தான் கிடைத்தேனா? என்றேன் சற்றே பயத்துடன்.

விளையாட்டுத்தான் பகத், ஒரு சின்ன விளையாட்டு, இவ்வுலகினில் நடப்பவை அனைத்தும் அல்லாமியாவின் விளையாட்டுத்தான் என்றபடியே என்னுடைய மடியில் தலையை வைத்துப் படுத்துக் கொண்டார்.

அடுத்த நொடியே அவருடைய உயிர் அவரது உடலை விட்டு பிரிந்ததை நான் உணர்ந்தேன். பாபாவின் யோக சக்தியை கடந்து முப்பது ஆண்டுகளாக அருகில் இருந்து கவனித்து வருகின்றேன். ஆயினும் இப்போது நிகழ்ந்தது சற்றே அதிர்ச்சி அளித்தாலும், பாபாவின் வாக்கின் மேல் நான் வைத்திருக்கும் "நம்பிக்கையினால்" உடனே சுதாரித்துக்கொண்டு பாபாவின் தலையை வசதியாக என் மடியின் மீது வைத்துக் கொண்டேன்.

அன்று இரவு மணி பத்தாகி விட்டதால் பாபாவை தரிசிக்க வந்த மக்களில் ஒரு சிலரைத்தவிர மற்ற அனைவரும் தத்தமது வீடுகளுக்குத் திரும்பி விட்டனர். பாபா திடீரென மகல்சாபதியின் மடியில் பேச்சு மூச்சின்றி கிடப்பதைக் கண்ட அங்கிருந்த மக்கள் ஓடிவந்து பாபாவைத் தொட்டுப் பார்த்தனர்.

உயிர் இருப்பதற்குண்டான அறிகுறி ஏதுமற்று அசைவற்றுக் கிடந்த பாபாவின் உடலைக்கண்ட மக்கள் பாபா இறந்துவிட்டதாகக் கருதி, பாபா, பாபா என்று கதற ஆரம்பித்தனர்.

உடனே நான் அவர்களைப் பார்த்து யாரும் அழாதீர்கள். பாபா இறக்கவில்லை. பாபா இறைவனிடம் சென்றிருக்கின்றார். மூன்று நாட்களில் திரும்பி வந்துவிடுவதாக கூறியிருக்கின்றார் என்றேன்.

கூடியிருந்த மக்கள் அனைவரும் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தனர். ஒரு சிலர் செய்தி


யைக் கூற ஊருக்குள் ஓடினர். சற்று நேரத்தில் ஊர் மக்கள் அனைவரும் மசூதியின் முன் கூடினர். பாபாவை நேசித்த அடியவர்களும், பெண்களும் கதறி அழ ஆரம்பித்தனர்.

திடீரென நிகழ்ந்துவிட்ட சம்பவத்தை ஏற்க முடியாமல் சிலர் அழுது புலம்பினர். பாபா இறந்துவிட்டார் என்ற செய்தி காட்டுத்தீ போல் பரவி அந்த இரவுப் பொழுதிலேயே அருகில் உள்ள ஊர்களில் இருந்தெல்லாம் மக்கள் பெருங்கூட்டமாகக் கூடி விட்டனர்.

பாபாவின் தலையை மடியில் வைத்திருந்த நான் வருகின்ற அடியவர்களிடம், நான் சொல்வதை நம்புங்கள் பாபா மூன்றாம் நாள் வந்துவிடுவார், பாபாவே என்னி டம் கூறிச்சென்றார். என்று அடிக்கடி கூறிக்கொண்டிருந்தேன்.

மறுநாள் காலை விடிந்தது. ஊர் முக்கியஸ்தர்கள் ஒன்று கூடி அடுத்து என்ன செய்வது என்று ஆலோசிக்க ஆரம்பித்தனர். இரவு பத்து மணிக்கே சுவாசம் நின்றுவிட்டது. பொழுது விடிந்து வெகுநேரமாகிவிட்டது. இனியும் இந்த உடலில் உயிர் வரும் என்பதை நம்ப முடியாது.

பாபா திடீரென்று இறந்து விட்டதால், மகல்சாபதிக்கு சித்தம் கலங்கிவிட்டது. அதனால்தான் பாபா மூன்று நாளில் வந்து விடுவார், வந்து விடுவார் என்று கூறிக்கொண்டே இருக்கின்றார்.



இவ்வாறாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக பேச ஆரம் பித்தனர். எல்லாவற்றையும் நான் காதில் வாங்கிக்கொண்டேனே தவிர, மூன்றாம் நாள் பாபா வந்துவிடுவார் என்ற வார்த்தையைத் தவிர வேறு எதையும், யாரிடமும் பேசவில்லை.

நேரம் ஆக, ஆக கூட்டம் பெருகிக்கொண்டே இருந்தது. பாபாவின் நெருங்கிய அடியவர்கள், இனி தங்களை யார் வழிநடத்தப் போகின்றார்கள் என்று மிகுந்த கவலையில் ஆழ்ந்தார்கள். மக்களில் பெரும்பான்மையோர் பாபாவின் உடலை எப்படி அப்புறப்படுத்துவார்கள் என்பதை காண ஆவலாய் காத்திருந்தார்கள்.

இப்படியே இரவும், பகலு மாய் போய் இன்றிரவு பத்து மணியோடு மூன்று நாள் முடிந்துவிட்டது. அதுவரை பாபா எழாததால் பாபாவின் நெருங்கிய அடியவர்களுக்கே நம்பிக்கை போய்விட்டது.

ஆனால், எனக்கு பாபாவின் வாக்கின்மேல் அதீத நம்பிக்கை இருந்தது. அந்த திருவாக்கே மூன்று நாட்களாய் என் உடலின் இயல்பான பசி, தாகம், கழிவு வெளியேற்றம் எதுவுமின்றி பாபாவின் உடலை என் மடிமீது தாங்கிக் கொண்டிருக்கும் துணிவையும் உடல் பலத்தையும் எனக்கு கொடுத்து. மூன்று நாட்களும் என் உடல் தேவைகளுக்காக நான் ஒரு விநாடிகூட பாபாவை விட்டு விலகவில்லை.

அதுவரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மக்களுக்கு பொறுமை போய்விட்டது. திடீரென்று பாபா இறந்து விட்டால் நாமெல்லாம் அதிர்ச்சி அடைந்து விடுவோமல்லவா? ஆகையால்தான் மூன்றாம் நாள் நான் திரும்பி வந்து விடுவேன் அதுவரை என் உடலை பார்த்துக் கொள்ளுங்கள் என்று ஆறுதலாக கூறி சென்றிருக்கின்றார். சாயி நம்மை ஏமாற்றிவிட்டார் என்றார் ஒருவர்.

மௌலீ, முல்லா, பக்கீர் அனைவரும் ஒன்று கூடி இனி தாமதிக்க முடியாது. உடனடியாக பாபாவின் உடலை அடக்கம் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தனர்.

அப்பா குல்கர்ணியும், காசிராமும் மக்களிடம் பேசினர். பாபா உண்மையிலேயே சுகம் தரும் இருப்பிடமான இறைவனிடம் சென்று விட்டார். இனித் திரும்பப் போவதில்லை. மகல்சாபதி கூறியதன் படி பார்த்தாலும் மூன்று நாட்களுக்கு மேலாகிவிட்டது. இனியும் உயிரற்ற உடலை அடக்கம் செய்யாமல் வெட்ட வெளியில் போட்டுவைப்பது அவ்வளவு நல்லதல்ல. பாபாவின் உடலை அவர் கூறியபடியே நல்லடக்கம் செய்து விடுவோம் சரிதானே என்றனர்.

கூட்டத்தில் யாரோ ஒருவர் பேசினார். கொஞ்சம் பொறுங்கள். அவ்வளவு விரைவாய் முடிவெடுக்காதீர்கள். இந்த அவசரம் நல்லதல்ல. பாபா நம்மைப் போன்று சாதாரண மனிதன் அல்ல. பாபாவின் வாக்கு இலக்கு தவறா தவை. இவ்வளவு நேரம் பொறுத்து விட்டோம். இன்று விடியும் வரை சற்று பொறுத்திருப்போம் என்றார்.

உயிர் போய் மூன்று நாட்களுக்கு மேலாகிவிட்டன. உயிர் போன அரை மணிநேரத்தில் உள் உறுப்புகள் கெட்டுப்போய் விடும் என்று சொல்லப்படுகின்றது. இன்னும் தாமதித்தால் உடல் ஊதி உப்பி வெடித்துவிடும். ஆகவே உடனடியாக அடக்கம் செய்கின்ற வேலையைப் பாருங்கள். என்றார் ஒருவர்.

உடனே மற்றொருவர், அதுதான் சரி, பாபா சுட்டிக்காட்டிய இடத்தில் சவக்குழி தோண்டுங்கள். எல்லா மக்களையும் கூட்டுங்கள். இனியும் தாமதிக்காது நல்லடக்கம் செய்யுங்கள். வேண்டியவை அனைத்தையும் தயார் செய்யுங்கள் என்றவாறே பாபாவின் உடலின் அருகே நெருங்கினர்.

அப்போது நான், அதற்கு ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்

டேன் என்று பாபாவின் தலையை என் மடியோடு சேர்த்து இறுக்கிப் பிடித்துக் கொண்டேன்.

செத்து மூன்று நாட்கள் ஆன பிணத்தை இவன் என்ன புதைக்க விடமாட்டேன் என்று சொல்வது. செய்தி அரசாங்கத்திற்கு தெரிந்து காவல்காரர்கள் வந்துவிட்டால் யார் பதில் சொல்வது. நீங்கள் ஆக வேண்டிய காரியத்தைப்பாருங்கள் என்றார் ஊர் தலைவர்.

அப்போது அதிகாலை நான்கு மணி இருக்கும். காலத்தால் அழிக்க முடியாத உலக மக்களால் மறக்க முடியாத அந்த அதிசயம் நிகழ்ந்தது. நானும் ஊர் தலைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, பாபாவின் கால் கட்டை விரல் மட்டும் அசைந்தது. நான் உடனே பாபாவின் முகத்தைப் பார்த்தேன். கண்கள் மெல்ல திறந்த கொண்டன.

ஒளி மிகுந்த அவருடைய காந்தக் கண்கள் பேரொளியை வீச ஆரம்பித்தன. சுவாசம் வர ஆரம்பித்து வயிறு ஏறி இறங்க ஆரம் பித்தது. தெய்வத் திருமுகத்தில் மலர்ச்சி மலர்ந்தது. காணாமல் போன செல்வம் மீண்டும் கிட்டி யது. கருணை தெய்வம் வாக்கு பலித்தது.

நான் பாபாவின் முகத்தை ஆனந் தத்துடன் குனிந்து பார்த்தேன். பாபாவும் மௌனமாக தலையை அசைத்து புன்னகைத்து விட்டு என் மடியினில் இருந்து மெல்ல எழுந்தார்.

ஊர் தலைவரும், மௌலீயும், பக்கீரும் உடலை புதைப்பதற்கு அவசரப்படுத்திய மக்களும் முகம் வெளுத்துப்போய் செய்வதறியாது திகைத்தனர்.

பாபாவின் அடியவர்களும், பக்தர்களும் பாபா உலகத்திற்கு உபாயம் செய்யவேண்டும் என்பதற் காகவே மூன்று நாட்கள் கழித்து மீண்டும் உயிர்பித்து வந்திருப்பதாக பேசிக்கொண்டனர். பாபா இயல்பான நிலைக்கு வந்ததை அறிந்து அவரை தரிசனம் செய்ய முண்டியடித்தனர். ஊரே திருவிழா போன்று களைகட்டியது.

பாபா பக்தர்களைப்பார்த்துக் கூறினார் உங்களுக்கெல்லாம் நான் கூறிய, "நம்பிக்கை, பொறுமை" யின் மீது விசுவாசம் இருக்கின்றது. ஆனால் "பகத்" அளவிற்கு அல்ல, அவன் மட்டும் சற்று உறுதி குலைந்திருந்தால் நான் மீண்டும் என் உடலுக்குள் திரும்பியிருக்க முடியாது.

எனவே இனியாவது நம்பிக்கை, பொறுமையின் மீது விசுவாசம் வையுங்கள். என் வார்த்தை என்றுமே பொய்க்காது. எனக்கும் வந்த வேலை சற்று எளிதாகும் என்று கூறிவிட்டு என்னைப்பார்த்து புன்னகைத்தார்.

என்று கூறிய மகல்சாபதி இவையே பாபா சாதாரண மனிதர் அல்ல என்பதை எங் களுக்கு உணர்த்திய நிகழ்வுகள் என்றார்.

தொடரும்

ஓம் சாய்ராம்.

நலமுடன் வாழ்வோம்

வாழ்வில் தோன்றும் பலவிதமான சவால்களுக்கும் தீர்வு ஒன்றே!



நம் அனைவர் மீதும் அளவில்லா அன்பு கொண்டு நம்மைப் படைத்த இறைவனே நமக்கு குருவாக உருவெடுத்து ஆயிரம் வருடங்களுக்கு முன்பே உபதேசித்த சக்தி வாய்ந்த எளிய மந்திரம். இம் மந்திரம் கொடுப்பினை உள்ளவர்களை மட்டுமே சென்றடைந்து ஜபிக்கத் தூண்டும்.

வாயு மண்டலத்திலும், நம்மையும் சூழ்ந்திருக்கும் எதிர்மறை சக்திகள், தீய எண்ணங்களை நீக்கி, நம் வாழ்வில் நேர்மறை சக்தியை ஒளிரச் செய்யும் ஸ்ரீ குரு தத்தாத்ரேயர் அளித்த மஹா மந்திரம்,

"திகம்பரா திகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப திகம்பரா"
திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ர தத்தாத்ரேயா திகம்பரா"


இந்த மந்திரத்தை தினமும் 108 முறை எவ்விதமான கட்டுப்படும் இல்லாமல் ஆத்மார்த்தமாக, ஜபம் செய்ய நம் இல்லத்திலும், உள்ளத்திலும் நேர்மறை சக்தியின் பாதுகாப்பு வளையம் நம்மை காத்து நிற்கும்.

சமர்த்த சத்குரு ஸ்ரீ சாய்மகராஜ் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் அருட்பார்வை நம் அனைவரையும் ஆசீர்வதிக்கட்டும். வாழ்க! வளர்க! குருவே துணை!

விபரங்களுக்கு:

"பாராயணப் பகலவன்"
திரு. சுந்தர்சாய், 9789404451

தொடர் - 15



திருவருள் தேடி

ஓம் சாய்ராம். சத்குரு வின் திருவடிகளை வணங்கி நமது 'திருவருள் தேடி' தொடரில் போன இதழில் நமது புதிய சவாலை சந்திக்க நமக்கு உதவிய பீஹார் நண்பரின் தொடர்பு மிக்க உதவியாக இருந்தது பற்றி எழுதியிருந்தோம். தாஷ்கென்ட் அலுவலகத்தில் நமது பொறுப்பு நல்ல படியாக நிறைவேற எல்லாவித சூழ்நிலைகளும் ஏற்பட்டதுடன், வேறு ஒரு திட்டமும் உருவாக இந்த காலம் சமிக்ஞை செய்தது ஒரு ஆச்சரியமே.

ஆம் நண்பர்களே! அந்த நேரத்தில் என் நீண்ட நாள் நண்பர் ஒருவர் தொடர்பு கொண்டு நலம் விசாரித்ததுடன் அவருடைய மேலதிகாரி ஒருவரின் அலைப்பேசி எண்ணையும் அளித்து அவருடன் தொடர்பு கொள்ளுமாறு கூறினார். நானும் உடனே ஒப்புக் கொண்டு அவரிடம் பேசினேன். அவரும் என்னை சந்திக்க ஒப்புக் கொண்டு அண்டை நாடான கசக்ஸ் தானின் தலைநகரான 'அல்மாட்டா' வில் உள்ள அவரது அலுவலகத்திற்கு வரும்படி அழைப்பு விடுத்தார்.

நானும் என் நண்பருடைய மேலதிகாரியின் அழைப்பை ஏற்று 'அல்மாட்டா' விற்கு சென்று அவரை சந்தித்தேன். அவரும் என்னுடன் மனம் திறந்து வியாபார சம்பந்தமான ஆழமான பிரச்சனைகளைப் பற்றி பகிர்ந்து கொண்டார்.

முக்கியமாக எனக்கு ஙிகிரிஹி எனப்படும் அஜர்பைஜான் நாட்டில் உள்ள நல்ல தொடர்பு பற்றித் தெரிந்து கொண்டு அங்குள்ள அவரது அலுவலகம் தொடர்பான சிக்கல்கள் பற்றி என்னிடம் விவரித்து, என்னால் உதவி செய்ய இயலுமா என்று கேட்டார். நானும் முயற்சி செய்வதாக கூறி

விடைபெற்று வந்தேன்.

போகும் பொழுது விமானத்தில் சென்ற நான், திரும்பும் பொழுது இரயிலில் பயணம் செய்தது ஒரு புதிய அனுபவமாய் அமைந்தது. நீண்ட பயணம் சுமார் 18 மணிநேரம். அங்குள்ள மைனஸ் டெம்பரேச்சரில் கிராமங்களில் பனிப்பொழிவு அதிகம். வெள்ளைக் கம்பளம் விரித்தது போன்று ஒரு ரம்யமான தோற்றம்.

பின்னர் நாங்கள் ஹிகிரிஹி வில் சந்தித்தோம். நானும் அவருடைய வியாபாரத்தில் ஏற்பட்ட ஒரு பெரிய சதித்திட்டத்தைப் பற்றி அங்கு விசாரித்து தெரிந்து கொண்டேன். இந்திய நண்பர் ஒருவர் அந்த நாட்டு பிரமுகர் ஒருவருடன் கூட்டு சேர்ந்து அங்குள்ள அவரது அலுவலகம் மற்றும் மருந்துகள் எல்லாவற்றையும் இரவோடு இரவாக கைப்பற்றி, அலுவலகத்திற்கு பூட்டுப் போட்டு ஆக்ரமித்த விஷயம் எல்லாம் ஒரு திகிலூட்டும் நாவல் போல் இருந்தது.

பலலட்சக்கணக்கில் பணத்தைப் பெற்றுக் கொண்டு, இந்திய நண்பர் ஒன்றும் அறியாதவர் போல் இந்தியாவிற்குத் திரும்பிவிட்டார். அவரது கூட்டாளியாக இருந்தவர் அந்த நாட்டின் போலீஸ் துறையில் ஓர் உயரதிகாரியாக வேலை செய்தவர். எனவே அங்கு வேலை செய்த 34 இந்தியர்களும் வீடு திரும்ப வேண்டிய நிலைக்கு



சுந்தர் சாய்

தள்ளப் பட்டிருந்தனர்.

அங்குள்ள சூழ் நிலையைப் புரிந்து கொண்டு எனக்கு மிக நெருக்கமான நட்பு வட்டாரத்தில் சில முக்கியமான தகவல்களை சேகரித்து என் நண்பரின் மேலதிகாரிக்கு வழங்கியதுடன், என் நெருக்கமான வியாபாரிகளிடம் அறிமுகம் செய்து உதவினேன். இந்த உதவிகள் அவருக்கு என்மீது நம்பிக்கையை அளித்ததால் அவர் என்னிடம் உயர்ந்த மதிப்பு வைத்து அடிக்கடி தொடர்பு கொண்டு பேசினார்.

அத்துடன் அந்த நாட்டில் என் வியாபார யுக்திகள், தொடர்புள்ள நட்பு வட்டாரம் இந்திய தூதரகம் வரை எனக்கிருந்த நெருங்கிய நண்பர்கள் என எல்லாம் அவரை என்னிடம் நம்பிக்கையுடன் பழக வைத்தது. மெல்ல அவரது வியாபாரத்திலும் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டது.

இவையெல்லாம் நிகழும் நேரத்தில் எங்களது தாஷ்கென்ட் தொழிற் சாலையை மூடிவிட நடவடிக்கைகள் தொடங்கியது. இதற்கிடையில் உக்ரைன் அல்லது மாஸ்கோ சென்று கள ஆய்வு செய்லாம் என்று யோசித்த நேரத்தில் இந்தியாவில் என் குடும்ப சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டது.

என் மாமனார் உடல்நலம் கடுமையாக பாதிக்கப்பட்டதால்


விடுமுறையில் சென்னை வரத் திட்டமிட்டேன். இது போன்ற மாற் றங்களால் குழப்பமான மனநிலை யில் 15 நாட்கள் லீவு எடுத்துக் கொண்டு சென்னை வந்தேன்.

டாக்டரிடம் காண்பித்ததில் என் மாமனாருக்கு கேன்சர் என்று புயலைக் கிளப்பினார். எனக்கு அதில் முழு நம்பிக்கை இல்லை என்றாலும், பகவான் சத்யசாயிடம் பிரார்த்தித்துக் கொண்டு வேறொரு மருத்துவரிடம் ஆலோசனை செய்தோம். அதேபோல் முடிவாக புற்றுநோய் என்று சொல்ல முடியாது என டாக்டரும் சொல்லியதால் நிம்மதி கிடைத்தது.

இதற்கிடையில் என் நண்பரின் மேலதிகாரி என்னைத் தொடர்பு கொண்டு, நேரடியாகவே என்னை அவருடைய அலுவலகத்தில் ஒரு புதிய கிளை ஆரம்பிக்க உத்தேசம் உள்ளதால் அதற்கு பொறுப்பேற்க முடியுமா என விசாரித்து, ஆலோசித்து முடிவெடுக்க கால அவகாசம் தந்தார்.

ஓரளவு 'ஙிகிரிஹி' நகரத்திலேயே கிளை தொடங்குவதால் எனக்கு அறிமுகம் உள்ள இடம் என்பதால் எனக்கும் ஒரு விருப்பம் தோன்றியது. நானும் ஓரிரு மாதங்கள் அவகாசம் வாங்கிக் கொண்டு நான் வேலை செய்யும் மும்பை அலுவலகத்திற்குச் சென்று என் வேலையை ராஜினாமா செய்வதாக கடிதம் கொடுத்தேன்.

அவர்கள் அதை ஏற்க மறுத் தனர். நான் தீவிர ஆலோசனைக்குப் பிறகு இந்த முடிவை எடுத்ததால்,



அதில் பின்வாங்க மனமின்றி எனக்கு கிடைத்த புதிய சந்தர்பத்தைப் பயன்படுத்தி சம்பள உயர்வுடன் கிடைத்த பொறுப்பை ஏற்பதாக எனது நண்பரின் மேலதிகாரிக்கு உறுதி கூறினேன். அவரும் 10,15 நாட்களுக்குள் வந்து பொறுப்பேற்றுக் கொள்ளவும் என்று பதில் அனுப்பினார்.

இதற்கிடையில் வீட்டில் உள்ள சூழ்நிலைகளும் ஓரளவு முன்னேற்றம் அடைந்து ஒரு மனநிம்மதி கிட்டியது. எல்லாமே நேரம், காலம் விதித்தபடி நடப்பதை என்னால் உணர முடிந்தது.

புதிய வேலையில் சேர்வதற்கு என்னைத் தயார் செய்து கொண்டு பயணம் செய்து திரும்பவும் ஙிகிரிஹி நகரத்திற்கு வந்து சேர்ந்தேன். ஏற்கனவே அங்கு இவர்கள் கிளை அலுவலகம் இருந்தாலும், அங்கு வேலை செய்த ஓரிரு இந்தியர்களை நானும் அறிமுகம் ஆகியிருந்தாலும்

எனக்கு இந்த மாற்றத்தில் பெரிய சவால்கள் ஒன்றுமிருக்காது என எண்ணினேன்.

மேலும் இந்த நாட்டில் மருந்து வியாபாரம் நன்கு பழக்கமானதால் எளிதாக பொறுப்பேற்கலாம் என உணர்ந்தேன். எனக்கென்று இருந்த அனுபவம் மற்றும் தொழி லில் இருந்த மரியாதையும் அனைவ ருக்கும் தெரிந்தே இருந்தது. நான் தனி ஒருவனாக எங்கு சென்றும் கொடுத்த வேலையை செவ்வனே செய்து முடிப்பேன் என்பது எனக்கு இருந்த ஒரு ப்ளஸ் பாயின்ட்.

புதிய இடத்தில், புதிய அலுவ லகம் அமைப்பது, வேலைக்கு ஆட்கள் நியமிப்பது என எல்லாம் தனியாளாக செய்ய வேண்டி யிருந்தது. இதையெல்லாம் கவனித் தால் ஒரு போட்டி அலுவலகம் போன்ற தோற்றம் ஏற்பட வாய்ப்பாக அமைந்தது.

எல்லாவற்றையும் பேசி வெளி யிட எனக்கு அனுமதியில்லை. அதனால் சில சந்தேகங்களும், போட்டி மனப்பான்மையும் உருவாகியது. ஏனென்றால் அவர்களுடைய முன் அனுபவம் மிகுந்த எச்சரிக்கை உணர்வை ஏற்படுத்தியிருந்தது. எனவே இது ஒரு புதிய சவாலான அனுபவம் எமக்கு. அதை மேலும் அடுத்த இதழில் தெரிந்து கொள்வோம்.

குரு வாழ்க! குருவே துணை!

எல்லாம் சாயி! எல்லாமுமே சாயி!

தொடரும்

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

சித்தர்களின் சீவ சமாதி தரிசனம்

இம்மாத சித்தர்களின் ஜீவசமாதி தரிசனத்தில் நாம் "ஸ்ரீ பைரவ சுவாமிகள்" சீவ பீடத்தை தரிசனம் செய்து அவரின் வாழ்க்கை குறிப்புகளை அறிந்து கொள்வோம்.



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523


ஸ்ரீ பைரவ சுவாமிகள்

நம் நாட்டில் எத்தனையோ சித்தர்கள், மகான்கள், யோகிகள் சீவசமாதி அடைந்துள்ளனர். நாம் என்ன புண்ணியம் செய்தோமோ? இத் திருநாட்டில் பிறந்ததற்கு.

மக்கள் எண்ணற்ற சித்தர்களை வழிபட்டு வருகின்றனர். தான் வணங்கும் சித்தரை குருவாகவும், தாயாகவும், தந்தையாகவும், தாத்தாவாகவும் அவரவர் பார்வையின் படி அழைத்து வழி படுகின்றனர். இப்படி பல சித்தர்களின் வரலாறு தெரிகிறது. சில சித்தர்களின் வரலாற்றை அறிய முடிய வில்லை. சித்தர்களின் சூட்சுமமான வாழ்விற் குள் நாம் அடிமுடி தேடி கண்டுபிடிக்க முடியாது.

ஸ்ரீ பைரவ சித்தர் எங்கிருந்து வந்தார்? அவருடைய பூர்வீகம் எது? அவருடைய தாய்மொழி என்ன? அவருடைய சொந்த பெயர் என்ன? என்று எந்த செய்தியும் அறிய முடியவில்லை. இருந்தாலும் அவர் செய்த அற்புதங்களை அறிய முடிகிறது.





சிவ வழிபாட்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் நமது பைரவ சித்தர். தற்போது ஜீவ பீடம் உள்ள இடத்தில் தவத்தில் ஈடுபடுவார். இவர் தவத்தில் இருக்கும் போது இவரைச் சுற்றி நாய்கள் பாதுகாப்பாக சித்தரை காத்து நிற்குமாம். எப்போதும் நாய்கள் அவரைச் சுற்றியே இருக்கும்.

இவரும் நாய்களிடம் பாசமாக இருப்பார். முதலில் நாய்களுக்கு உணவளித்த பின்பு தான் அவர் உணவருந்துவார். நாய்களை பைரவர் என்றும் நாம்

அழைக்கின்றோம். அதனால் மக்கள் அவரைப் பக்தி சிரத்தை யுடன் "பைரவ சுவாமிகள்" என்று அழைத்து மகிழ்ந்தனர்.

"நாயினும் கீழேன்" என்று திருவாசகத்தில் தன்னை தாழ்த்தி கொள்கிறார் மாணிக்க வாசகர் பெருமான்.

1830 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இராணுவ படையான மெட்ராஸ் நேட்டிவ் காலாட்படை 40வது பிரிவு இங்கு செயல்பட்டு வந்தது (பூந்தமல்லி பகுதியில்) வெளிநாட்டினரும் போற்றி வணங்கிய சித்தர் நமது பைரவ சுவாமிகள். சுவாமிகள் தவம் செய்யும் போது அவருக்கு எந்த தொந்தரவும் தராமல் இருந்தனர் பிரிட்டிஷ்காரர்கள்.



மரங்கள், செடி கொடிகள் நிறைந்த இப்பகுதியில் வாழ்ந்து சிவ வழிபாடு செய்து தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு அருள் ஆசிகளை வழங்கி 20021888 ல் தற்போது ஜீவபீட ஆலயம் உள்ள இடத்தில் ஜோதியானார்.

இன்றும் குரு பூஜை மற்றும் விஷேச பூஜைகளில் அதிகளவில் நாய்கள் இங்கு வருவதைக் காணலாம்.

ஜீவ சமாதிக்கு வந்து சித்தரை வணங்கும் சித்தரடியார்களின் வாழ்க்கையில் பல பேருக்கு அறிபுதங்களை செய்து இருக்கிறார் நமது பைரவ சித்தர்

தரைத் தளத்தில் இருந்து பல அடிகள் இறங்கி இவரை தரிசனம் செய்ய வேண்டும். இந்த அமைப்பு நூற்றாண்டை கடந்தது என சொல்லலாம். சுமார் 135 ஆண்டுகள் பழமையான ஜீவ சமாதியாகும்.

பைரவ சித்தர் ஜீவபீட ஆலய முகவரி:

ஸ்ரீலஸ்ரீ பைரவ சித்தர் ஜீவபீட ஆலயம், ராஜ அக்ரஹாரம் தெரு, (செல்வ விநாயகர் ஆலயம் பின்புறம்) பூந்தமல்லி, சென்னை 56.

(சென்னையில் இருந்து வருபவர்கள் பூந்தமல்லி பேருந்து நிலையம் எதிரே உள்ள சாலையில் சென்றால் கடைசியில் நமது பைரவ சித்தரின் ஆலயத்தைக் காணலாம்)

பேரூந்து வழிதடம்:

சென்னை கோயம்பேடு சென்னை கிளாம்பாக்கம் இங்கிருந்து நிறைய பேருந்துகள் வருகின்றன. இறங்குமிடம் : பூந்தமல்லி பேரூந்து நிலையம்.

மின்சார ரயில் வழித்தடம்:

சென்னை கடற்கரை திருவள்ளுவர், இறங்குமிடம்: ஆவடி ரயில் நிலையம். இங்கிருந்து பூந்தமல்லிக்கு பேரூந்து ஆட்டோ வசதி உண்டு.

சித்தர்களின் சீவபீடங்களை வணங்கி நம் வாழ்வின் கர்மவினை களை குறைத்துக் கொள்வோம்!

(தரிசனம் தொடரும்)

7 ஆம் ஆண்டு துவக்க விழா



நமது சாயி மகராஜ் குருவைத் தேடி ஆன்மீக மாத இதழின் 7 ஆம் ஆண்டு துவக்க விழாவும், 73 வது இதழ் வெளியீட்டு விழாவும், ஆசிரியரின் "குருவைத்தேடி" தனிப்புத்தகம் வெளியீட்டு விழாவும் "முப்பெரும் விழாவாக" கடந்த 11.08.2024 ஞாயிற்றுக்கிழமை சென்னை அயனாவரம் இராம லிங்க சுவாமி சன்மார்க்க சத்திய சங்கத்தில் மிகச்சிறப்பாக நடை பெற்றது.

விழாவிற்கு சீரடியில் இருந்து "வாழும் பாபா" ஸ்ரீ அச்சுதானந்த சுவாமிகள் அவர்கள் வந்திருந்து தலைமையேற்று சிறப்பித்தார்கள். விழா காலை 9.00 மணிக்கு தொடங்கியது.

முதல் நிகழ்ச்சியாக, திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார், திருமதி. சுமதிராமமூர்த்தி, திருமதி. ஜானகி சீனிவாசன், திருமதி. திருமலைச் செல்வி, திருமதி. கோமதி, செல்வி. அட்சயாசாய், செல்வி.அமிர்தா,

சாந்தி வெங்கடாசலம்

செல்வி. அட்சயா, மற்றும் சந்ரோதயம் ஆகியோரின் சாய் பஜன் நிகழ்ச்சி நிகழ்ந்தது.

அடுத்து திருமதி. சாந்தி வெங்கடாச்சலம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களின் அறிமுகம் நடந்தது. அனைவருக்கும் ஆசிரியர் அவர்கள் பொன்னாடை அணிவித்து கவுரவித்தார்கள்.

திரு. அச்சுதானந்தசுவாமிகள், திரு. சுந்தர்சாய், திரு. கலியன் சாய், திருமதி. மாதங்கி பாலாஜி, திருமதி.சுனந்தா ஆனந், திரு. வேணுகோபால், திரு. பிரசாத், திரு.அகஸ்டின் ஆகியோர் ஆசிரியரு டனான தங்களது அனுபவங்களை பக்தர்களிடையே பகிர்ந்து கொண்டனர்.

திரு. கோபால் அவர்கள்

(தொடர்ச்சி 31-ம் பக்கம்)

SOUNDS GOOD

BOOK FOR EVENTS

LIGHT MUSIC ORCHESTRA



Wedding | Birthday | Corporate Get together Events



- Light Music
- Karaoke
- Instrumental Music
- DJ Music




www.soundzgood.in

95 66 16 76 80

saai_archana_vr

SOUNDSGOOD Musically the best

SoundsGood Music Group



யோகி ஸ்ரீராம் பாபா

அவர்கள் எழுதிய

அற்புதமான

ஆன்மீகத் அனுபவத்

தேடல்கள் நிறைந்த

"குருவைத்தேடி"

நூல் விற்பனையில்

உள்ளது. தேவைப்படுவோர்

தொடர்பு கொள்ளவும்.

விலை 400/-

(தபால் செலவு உட்பட)

G- PAY NO: 9941816692

SAI DHYANALAYA

7 ஆம் ஆண்டு துவக்க விழா நிகழ்வுகள்




















அயனாவரம், சென்னை - 23.









ASV. SURESH BABU

ASV REMEDIES (INDIA)

NO. 407-B, Selvam Nagar Main Road,

Swamy Ramalinga Colony,

Ponniammanmedu,

Chennai - 600110.

Telefax : 044- 49538434

Mobile : 9884988828

E-mail : asvremedies@gmail.com

(26-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியரைப்பற்றிய சிறப்பான பாராட்டுக் கவிதை ஒன்றை வாசித் தளித்தார். 'குருவருள் வேண்டி' திரு. அசோக்குமார் அவர்கள் கண் அறுவை சிகிச்சை மேற்கொண் டிருந்த போதும் நிகழ்ச்சியின் இறுதிவரை இருந்து சிறப்பித்தார்.

விழாவில், திரு. உதி மூர்த்தி, திரு. சந்திரன், திரு.இராமமூர்த்தி, திரு.இராதா சீனிவாசன், கோபுரம் டி.வி திரு.பிரசாத், திரு.பிரபாகரன், திரு. வெங்கடேசன், கோவை தீபக், கார்த்திக், இரவி, பாலமுரளி மற்றும் ஏராளமான சாய் பக்தர்கள் கலந்து கொண்டு சிறிப்பித்தனர்.

மதியம் 12 மணிக்கு, 73 வது இதழையும், "குருவைத் தேடி" தனிப் புத்தகத்தையும் "வாழும்பாபா" திரு. அச்சுதானந்தா சுவாமிகள் அவர்கள் வெளியிட, ஆசிரியரின் அன்னை. திருமதி. இந்திரா வெங்கடாசலம் அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

மதியம் 1.00 மணிக்கு அற்புத சாயிபாபா ஆலய அர்ச்சகர் திரு.சேகர் அவர்கள் பாபாவிற்கு சிறப்பு ஆரத்தி செய்தார். அதைத்தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

மதியம் 2 மணிக்கு, சாயி சேவை செய்த 15 நபர்களுக்கு சாயி மகராஜ் குருவைத்தேடி மாத இதழின் 7 ஆம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு திரு. அச்சுதானந்தா சுவாமிகளின் கைகளால் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.

மதியம் மூன்று மணியளவில்



கோவை ஆவோ சாயி குழுவினரின் தலைமையில், சாயி பஜனுடன் பல்லக்கு ஊர்வலம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவரும் பல்லக்கினை தூக்கி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். இறுதியாக மாலை 4 மணிக்கு மங்களாரத்தி செய்து விழாவினை நிறைவு செய்தனர்.

விழாவினை தொடங்கியதில் இருந்து இறுதிவரை நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி எங்களுடன் உறுதுனையாக இருந்த கூத்தனூர், திரு. சாய் சரவணன் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆண்டு விழா மிகச்சிறப்பாக நடைபெறுவதற்கு பலவிதங்களிலும் எங்களுக்கு பேருதவிகள் செய்த அனைத்து சாய் சொந்தங்களுக்கும் எங்களது பணிவான நன்றியினை அவர்களது பொற்பாதங்களில் சமர்ப்பித்து நிறைவு செய்கின்றோம்.

நன்றி! நன்றி! நன்றி!

“மெய்ஞ்ஞானி” பட்டினத்தடிகள்



பதினோராம் திருமுறையில் இவரது பெயர் பட்டினத்தடிகள் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. எனினும், பட்டினத்தார், பட்டினத்துப் பிள்ளை, பட்டினத்துப் பிள்ளையார், திருவெண்காட்டு அடிகள் என்னும் பெயராலும் இவர் அறியப்படுகிறார்

இவரது ஊராகிய புகார்ப்பட்டினம் பெரிய பட்டணம் ஆதலால் இவரைப் ‘பட்டணத்தார்’ எனவும் அழைகின்றனர். கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடை மருதூர் மும்மணிக் கோவை, திருஏகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபது என்னும் 5 நூல்கள் இவரால் பாடப்பட்டவை.

பட்டினத்தார் தொடர்புடைய கதைகளை பட்டினத்தார் புராணம் பக்கத்தில் காணலாம். பட்டினத்தார் சோழர்கள் காலத்தில், கி.பி. 11 ஆம் நூற்றாண்டில், வாழ்ந்த துறவி. இவருடைய இயற்பெயர் திருவெண்காடர்.

இவர் காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகத்தொழில் புரிந்து வந்த பெருஞ் செல்வர். கடல்வழி வாணிகத்தில் பெரும் பொருள் ஈட்டியவர். பொருளின் நிலையாமையை உணர்ந்து, கடவுள் பால் ஈர்ப் புண்டு துறவறம் பூண்டவர். பெருஞ் செல்வத்தைத் துறந்து இவர் பூண்ட துறவு, கௌதம புத்தருக்கு இணையாக தமிழ கத்திலே கருதப்படு கின்றது.

பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்தடிகள் போல் யாரும் துறக்கை அரிது என்ற கூற்றால் பரவலாக பாராட்டப்படுபவர். தம் தாயார் இறந்த பொழுது உடலுக்குத் தீ மூட்டும் முன் அவர் உருகிப் பாடிய பாட்டைக் கேட்டு இன்றும் கண்ணீர் உகுப்பவர் பலர்.

சிவநேசர் ஞானகலை என்ற தம்பதியருக்கு மகனாக காவிரிப் பூம்பட்டினத்தில் பிறந்த இவருக்கு, திருவெண்காட்டில் உறையும் சுவேதாரண்யப் பெருமானை நினைத்து சுவேதாரண்யன் என்று பெயரிடப்பட்டது. திருவெண் காடர் என்றும் அழைக்கப்பட்டார். பெருந்தன வணிகக் குடும்பம் என்பதால் திரைகடலோடியும் பெருஞ்செல்வம் திரட்டி மன்னரும்

மதிக்கத்தக்க வளத்துடன் இருந்தார்.

அதனால் பெயர் சொல்லி அழைக்கத் தயங்கிய மக்களால் பட்டினத்தார் என்றே அழைக்கப்படலானார். சிவகலை என்னும் பெண்ணை மணந்து இல்லறம் நடத்தினார். குழந்தைப் பேறு இல்லாத வருத்தத்தில் திருவிடைமருதூர் சென்று இறைவனை வேண்டினார். அங்கே சிவசருமர் என்கிற சிவபக்தர், கோவில் குளக்கரையில் கண்டெடுத்ததாகக் கூறி ஓர் ஆண்மகவை பட்டினத்தாருக்குக் கொடுத்தார்.

அவனுக்கு மருதவாணன் என்று பெயரிட்டு வளர்த்து வந்தார் பட்டினத்தார். செல்ல மகனாக வளர்ந்த அவன் படிப்பிலும் நாட்டமில்லாமல், வாணிகத்திலும் நாட்டமில்லாமல் அசட்டையாக இருந்தான். எனினும் சுட்டிப்பயலாக இருந்தான்.

பையனைக் கடல் கடந்து வாணிகத்துக்கு அனுப்பினால் புத்தி வரும். சொத்துக்களைக் காப்பாற்றுவான் என்று எண்ணி, கப்பலில் கடாரத்துக்கு அனுப்பினர். புறப்பட்டபோது அவன் அனுபவசாலி போல், கெட்டிக்காரத்தனமாகப் பேசினான். பெற்றோர், பிள்ளைக்கு புத்தி வந்துவிட்டது என்று மகிழ்ச்சியோடு வழியனுப்பினர்.

86 நாட்களுக்குப் பின் திரும்பிய மருதவாணன், துள்ளலோடு போனவன் சாதுவாகத் திரும்பினான். அதுவும் சிவ பக்தனாக. அவனுடன் வந்திருந்த வெளி நாட்டுச் சரக்குகளை வேலையாள்கள் இறக்கினர். அது கண்டு பட்டினத்தார் அதிர்ந்தார். ஏனெனில் பொன் பொருள்களைப் பெட்டியில்தான் எடுத்து வர வேண்டும். ஆனால் இறங்கியவை அனைத்தும் சாக்கு மூட்டைகள்.

ஒரு மூட்டையைப் பிரித்துப் பார்த்தார் பட்டினத்தார். உள்ளே எரு மூட்டைகள், தவிட்டு உமிகள். ஆத்திரமடைந்தார் பட்டினத்தார். பரம்பரையாகப் பொன் வணிகக் குடும்பத்தின் பெருமையைக் காப்பாற்றுவான் என நினைத்தால்...

கோபமாக மகனைத் தேடிய பட்டினத்தார், தனது மனைவியை அழைத்துப் 'பார்த்தாயா உன் மகன் லட்சணத்தை' என்றபடி மூட்டைகளை எட்டி உதைத்தார் பட்டினத்தார். மூட்டை கிழிந்து கூட மெல்லாம் எரு மூட்டைகள் சிதறியது.

அட ! திகைத்தார் பட்டினத்தார். எரு மூட்டை உடைந்து உள்ளிருந்து நவமணிகள் உருண்டன. உமிகள் எல்லாம் தங்கமாய்ப் பளபளத்தது.

சல்வத்தைக்கண்ட பட்டினத்தார். ஆனந்தக் கூத்தாடினார். ஒரு பயணத்திலேயே கோடிக்கணக்கில் செல்வம் வந்து சேர்ந்துவிட்டதே என்று மனங்குளிர்ந்தார்.


'மகனே... மகனே மருதவாணா' என்று அழைத்தார். ஆனால் மகனைக் காணவில்லை. ஆனால், அவன் கொடுத்து விட்டுப்

போனதாக ஒரு சிறிய பெட்டியை கொடுத்தாள் அவரது மனைவி

அதை வாங்கித் திறந்தார் பட்டினத்தார். உள்ளே ஒரு நறுக்கு ஓலை. அதில் 'காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே' என்று எழுதியிருந்தது. அதைப் படித்ததும் ஆடிப் போனார் பட்டினத்தார். மாளிகை சுழன்றது. மன மயக்கம் தெளிந்தது.

உலக வாழ்வின் நிலையாமை புரிந்தது. ஆர்ப்பாட்டம் அடங்கியது. அரசனைப் போல் வாழ்ந்த தவர் துறந்தார் ஆசைகளை. துறவு பூண்டு தான் செல்வச் செழிப்போடு வாழ்ந்த தன் சொந்த ஊரிலேயே பிச்சை எடுத்து வாழ்ந்தார்.

அவர் துறவியாகத் திரிவ தால் தம் குடும்ப கௌரவம் கெடுவதாக எண்ணி அவருக்கு விஷம் தோய்ந்த அப்பம் கொடுக்க முயன்றார் அவருடைய தமக்கை. அந்த அப்பத்தினை அவள் வீட்டுக் கூரை மீதே சொருகி விட்டு "தன்வினை தன்னைச் சுடும்; ஓட்டப்பம் வீட்டைச் சுடும்' என்று கூறிவிட்டு பட்டினத்தார்



சென்று விட அந்தக் கூரை தீப்பற்றி எரிந்த அதிசயம் கண்டு அவரும் மற்ற உறவினர்களும் அவருடைய அருமை அறிந்தார்கள்.

அவர் சித்தர் என்று உணர்ந்து கொண்டு பட்டினத் தடிகள் என்று மதிக்கத் தொடங்கினார்கள்.

பட்டினத்தடிகள் துறவியாக ஊர் ஊராகத் திரிந்து கொண் டிருந்த காலத்தில் அவருடைய அன்னையார் மரணமடைந்தார். அவருடைய ஈமச்சடங்கை எங்கிருந்தாலும் வந்து செய்து தருவேன் என்று வாக்களித்திருந்த பட்டினத் தடிகள் சரியான நேரத்தில் சுடுகாட்டினை அடைந்தார்.

அவருடைய தாயின் சிதைக்காக உறவினர் கள் அடுக்கியிருந்த காய்ந்த விறகுகளை அகற்றி விட்டு பச்சை வாழை மட்டைகளையும் இலை களையும் கொண்டு சிதை அடுக்கி பத்துப் பாடல் களைப் பாடி சிதையைப் பற்றச் செய்தார். அந்தப் பாடல்கள் மிகப் புகழ் பெற்றவை.

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி

என்று தொடங்கும் பத்துப் பாடல்களைப் பாடி அன்னையின் சிதைக்கு தீ மூட்டினார்.

வாழ்வின் நிலையாண்மை பற்றி நிறையப் பேசியவர். ஆசைகளை அறுக்கச் சொன்னவர். அதிலும் பெண்ணாசை பெருந்தீங்கென்றவர் பட்டினத்தார்.

அத்தமும் வாழ்வு மகத்துமட்டே ! விழியம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மியிரு
கைத்தல மேல் வைத்தழு மைந்தருஞ்சுடு காடு மட்டே
பற்றித் தொடருவினைப் புண்ணியப் பாவமுமே

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டு ஓடி ஆடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகே இனிச்சாம் பிணங்கள்
கத்துங் கணக்கென்ன? காண்கயிலாபுரிக் காயித்தியே!

இருப்பது பொய் போவது மெய் என்று எண்ணி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினை உன்னாதே பருத்த தொந்தி
நம்மது என்று நாம் இருப்ப நாய் நரிகள் பேய் கழுகு
தம்மது என்று தாம் இருக்கும்தான்.

என்பதும் அவரது ஞான வரிகளில் சில.

சிற்றம்பலமும் சிவனும் அருகிருக்க
வெற்றம்பலம் தேடி விட்டோமே நித்தம்
பிறந்த இடம் தேடுதே பேதை மட நெஞ்சம்
கறந்த இடம் நாடுதே கண்.

என்று அவர் தன்னை நொந்து கொள்வது போல் பிறருக்கு அறிவுரை வழங்கினார்.

தாயின் மரணத்தின் பின் தென்நாடு விட்டு வட இந்திய யாத்திரை மேற்கொண்டார். உஜ்ஜயினியில் அவருக்குக் கிடைத்த அனுபவம் வாழ் வின் பல புதிர்களுக்கு விடை அளிக்கும். அங்கு அவருக்கு பத்திரகிரியார் சீடராக வாய்த்தார். பின்னர் இருவரும் தென்னாடு திரும்பினர்.



திருவிடைமருதூரில் பத்திரகிரியாருக்கு மோட்சம் கிடைத்து விட்டது. பட்டினத்தார் தனது முடிவு எங்கே என்று ஈசனிடம் கேட்டார். 'பேய்க் கரும்பு எங்கு இனிக்கிறதோ அங்கே உனக்கு முடிவு தெரியும்' என்று ஈசன் சொன்னதாக ஓர் கருத்து உண்டு.

அதன்பிறகு பட்டினத்தார் பல இடங்களுக்கும் சென்றார். சென்னையை அடுத்த திருவொற்றியூர் கடற்கரைக்கு வந்து சேர்ந்த போது அங்கு நிறைய பேய்க் கரும்பு இருக்கக்

கண்டார். ஒன்றை ஒடித்து கடித்துக் பார்த்தார். அது இனித்தது.

கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களை அழைத் தார். அவர்களிடம் மணலை அள்ளிக் கொடுத்து 'சாப் பிடுங்கள் சர்க்கரையாய் இனிக்கும்' என்றார்.

அவர்கள் தயங்கினர். 'சாப்பிடுங் கள்' என்று பட்டினத்தார் உற்சாகப் படுத்த அவர்கள் சாப்பிட்ட மணல் இனித்தது. பின்னர் அங்கிருந்த 'சால்' கொண்டு தன்னை மூடச் சொன் னார். சிறுவர்கள் மூடினர்.

சிறிது நேரத்தில் அவர் பின்னா லிருந்து நடந்து வந்தார். சிறுவர் களுக்கு ஆச்சரியம். உள்ளே வைத்து மூடிய ஆள் எப்படி வெளி வந்தார். மீண்டும் சாலில் வைத்து மூடினர். அப்போதும் அவர் வெளியில் வந்தார்.

மூன்றாவது முறையாகவும் சால் உள்ளே வைத்து மூடினர் சிறுவர் கள். இப்போது அவர் வரவில்லை. வருவார் வருவார் என எதிர்பார்த்த சிறுவர்கள் அவர் வராததால் சாலைத் திறந்தனர். உள்ளே ஓர் சிவலிங்கம் இருந்தது. அதிசயித்த சிறுவர்கள் ஊருக்குள் ஓடிப் போய் மக்களை அழைத்து வந்தனர்.

அது முதல் அந்த லிங்கம் வழி பாட்டுக்குரியதாகியது. லிங்கமாக மாறிய பட்டினத்தார் கோயில் இன் றும் திருவெற்றியூரில் பக்தர்களால் வணங்கப்பட்டு வருகின்றது. ●

எதிர்பார்ப்பு

எதிர்மறை எண்ணங்கள் ஏன் வருகின் றன? பூர்வ ஜென்ம கர்மா, தவறானவர் களின் சகவாசம், பெற்றோர் வளர்ப்பு என்றாலும்கூட "எதிர்பார்ப்பே" எதிர்மறை எண்ணங்களுக்கான விதை நெல்!

இது இப்படித் தான் நடக்க வேண்டும் அவர்கள் அப்படித் தான் நம்மிடம் நடந்து கொள்ள வேண்டும்! என்ற தீவிர எதிர்பார்ப்பு! அப்படி நடக்காமல் போனால் எதிர்மறை எண்ணங்கள் தாண்டவமாடும்! நினைத்த உடனே எல்லாம் கிடைத்து விட வேண்டும் நடந்து விட வேண்டும் என்ற பிடிவாத குணம் அது ஒரு காலமும் நிகழாது என்பது பக்குவம் வர வரவே புரியும்!

ஏற்றுக் கொள்ளும் குணம் இல்லாததே நமது கவலைகளுக்கு காரணம்! கவலைகள் என்பது வெறும் எதிர்மறை எண்ணங்களே! ஏன் ஏற்றுக் கொள்ளும் குணம் இல்லை? நமக்கு எல்லாம் தெரியும் என்ற நினைப்பு! நமது கற்பனைகளுக்கு முரணாக நிகழும்



பொழுது நமது அகந்தை சுக்கு நூறாக உடைந்து போகிறது! அந்த நேரத்தில் ஏற்றுக்கொள்ளும் குணம் இல்லை.

என்ன நடந்தாலும் வாழ்வில் எனக்கு ஏற்றுக் கொள்ளும் குணம் ஒன்றையே கொடுங்கள் சுவாமி!" என்று பகவான் பாபாவிடம் வேண்டுவதே சரியான பிரார்த்தனை! மனம் பாறையாக இறுக வேண்டும். இதயம் வெண்ணெயாக உருக வேண்டும். அதுவே ஆன்மீகம்!



சாயி மகராஜ் குருவைத்தேடி
ஆன்மீக மாத இதழின்

7 ஆம் ஆண்டு துவக்க விழாவிற்கு

வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும்
எங்களது மனமார்ந்த நன்றியினை
தெரிவித்துக் கொள்கின்றோம்.



அன்புடன்;

P. சாய் பிரணயா

P. சாய் கிருஷ்ணா

M. யஷ்வந்த் சாய்

D. ஹர்தினி சாய்

மற்றும்,

உமாசங்கர் குடும்பத்தார்.

பாடி, சென்னை.







தொடர் - 38

சாய் சரவணன்

அதிதேவதை



சாலாவில் ஆயி கூறும் கதைகளின் உட்கருத்து குருவின் சேவைக்கு தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற உந்துதலை ஏற்படுத்தும். அக்கதைகளை நாமும் கேட்போம்.

பண்டரிபுரம் எனும் புண்ணிய ஸ்தலத்தின் அருகே மங்கள்வேடா எனும் சிறிய ஊர். அவ்வூரில் சியாமளா எனும் பெயர் கொண்ட விலைமாது வாழ்ந்தாள். அவளுக்கு கானோபாத்ரி எனும் அழகிய மகள் இருந்தாள். அவள் அழகில் மட்டு மல்ல பாகவத தர்மத்தில் நாட்டம் கொண்டவளாக இருந்தாள்.

கலை ஞானம் கொண்டவள். சங்கீத ஞானத்தில் புலமை பெற்றவள். அப்படிப்பட்ட கானோபத்ரியை அவளது தாய் சியாமளா தன் குலத்தொழிலுக்கு அடிமைப்படுத்தி எப்படியாவது அந்த நாட்டு மன்னனிடம் அவளை ஒப்படைத்து அவனது மதிப்பைப் பெற ஆவல் கொண்டாள்.

இதை அறிந்து கொண்ட மகளோ மனக்கலக்கமுற்று தன் தாயின் அறியாமையை போக்க தத்துவமான உபதேசங்களை உபதேசித்தாள். "அம்மா ! இந்த உலகில் இன்பம் என்று ஏதாவது இருக்கிறதா? ஒவ்வொரு பொருளும் நமக்கு துன்பத்தை அல்லவா தருகிறது". இன்பம் துன்பம் என இரண்டையும் பற்றி ஆழ்ந்து சிந்தித்தால் எதுவும் நிரந்தரம் இல்லை என்று தெளிவாக புரியும்!

நமக்கு இன்பம் தரும் ஒரு பொருள் அதே சமயத்தில் வேறு ஒருவருக்கு துன்பம் தருவதாக இருக்கிறது. ஆடவருக்கும் – பெண்டிருக்கும் ஆன உடற்சேர்க்கை இன்ப



மயமாக தோன்றும். ஆனால் காலத்தின் ஓட்டத்தில் வயதாகி, மூப்படைந்து அவர்களின் உடலில் நரை, திரை, நோய் தோன்றி ஒரு விதமான வெறுப்பை அல்லவா தருகிறது?

இளமையில் இன்பம் தந்த உடற் சேர்க்கையை நினைத்துப் பார்த்தால் கேவலமாக மாறிவிடும். பிறத்தல், வளர்த்தல், பருத்தல், வாடுதல், மடிதல் என மாறுதல் அடையும் மனித சரீரத்தை உடைய என்னை இந்நாட்டு மன்னனுக்கு அளித்து நீ சுகம் காணலாம் என நினைப்பது சரியா?

இப்போது எனக்கு இருக்கும் இளமையும், அழகும் எத்தனை நாள் நீடிக்கும்? நான் உன் மகள் என்றாலும் பகவத் கிருபையால் எனக்கு புலப்படும் இந்த சரீரத்தின் இயலாமை மற்றும் உண்மைத் தன்மையை கூறுகிறேன் கேள்! இவ்வுடல் புழுக்கள் நிறைந்த இறைச்சியால் வேய்ந்த சிறு வீடு ஆகும். சத்துள்ள உணவுகளை அருந்தினால் கூட உணவெல்லாம் கடைசியில் மலமாகி போகிறது.

சரீரத்தின் துர்நாற்றத்தைப் போக்க வாசனை திரவியங்கள், சந்தன புஷ்பங்கள் தரித்துக் கொண்டாலும் சிறிது நேரத்தில் உமிழ்நீர், வேர்வை இவற்றால் சரீரம் இழிவு நிலையை அடைந்து விடும். பெண்ணான என் மீது கொள்ளும் இச்சை இறுதியில் நரகத்தின் வாயிலுக்கு இட்டுச் செல்லும். எனவே, உண்மையான சுகம் என்பது பகவானின் திருவடியில் கிடைப்பதாகும். அந்த பரம சுகம் வேறு எங்கும் கிடைக்காது.

எனவே என் வாழ்வில் முடிவெடுக்கும் உரிமையை எனக்கே தந்துவிடு எனக் கதறி அழுதாள். காணோபாத்ராவின் இத்தகு ஞானத்தைக் கண்ட தாய் எதுவும் பேசாமல் மௌனம் ஆனாள். சில நாட்கள் கழிய ஓர்நாள் பாண்டுரங்

கனின் நாமசங்கீர்த்தன குழு அவளது ஊரில் முகாம் இட்டனர். இதையறிந்த கானோ பாத்ரா தாயிடம் அனுமதி பெற்று பாகவதர் களின் சத்சங்க லாப பாக்யத்தை அடைந்து பாண்டு ரங்கனை தரிசிக்க தீராத ஆவல் கொண்டாள்.

அவளது ஆசையை பகவான் தீர்க்க கிருபையை தந்தான். முகாம் இட்ட பாகவதர்கள் பண்டரிக்கு செல்லப் போவதை அறிந்த கானோபாத்ராவும் அவர்களுடன் சேர்ந்து பஜனை பாடி விட்டலனை தரிசனம் செய்ய வேண்டும் என எண்ணம் கொண்டாள். தாயிடம் அனுமதி பெற்று பாகவத கோஷ்டி யோடு பகவானின் கல்யாண குணங்களை பாடியவாறு பண்டரி புரம் சென்றாள்.

பண்டரியில் விட்டலனது தரிசனம் பெற்று ஆனந்தத்தில் மூழ்கி பகவானோடு கலந்து விட வேண்டும்என ஆசைக்கொண்டாள். இதற்கிடையே பண்டரிபுர அரச னுக்கு கானோ பாத்ராவைப் பற்றிய செய்தி அனுப்பப்பட்டது. அரசனோ எப்படி யாவது அவளை அடைந்துவிட வேண்டும் எனும் எண்ணம் கொண்டு சிப்பாய்களை விட்டு அவளை அழைத்து வர உத்தரவு பிறப்பித்தான்.

இதன்படி சிப்பாய்கள் கானோ பாத்ராவிடம் அரசனின் ஆசை யைக்கூறி தன்னுடன் வரவேண்டும் என வற்புறுத்தினார்கள். இதைக் கேட்ட கானோபாத்ரா கதிகலங்கி போனாள். கேவலமான இந்திரிய சுகத்தை தரும் இந்த அற்ப உடலுக்கா இவ்வளவு பெருமை.

இவ்வுடலில் நான் இருப்பதால் அல்லவா இந்த பிரச்சனை! பகவானது திருவடியில் தனது பிராணனை விட மனதில் எண்ணம் கொண்டு சிப்பாய்களிடம் நான் வருகிறேன் ஆனால் கடைசியாக என் பிரபுவை தரிசித்து வருகிறேன் எனக் கூறி கோவிலின் உள்ளே சென்றாள் கானோபாத்ரா. சிப்பாய் களோ வெளியே காத்திருந்தனர்.

பாண்டுரங்கனின் சன்னதிக்கு சென்ற கானோபாத்ரா மனம் உருகி பிரார்த்தனை செய்தாள் "பகவானே! நின் புகழ் கேட்டும், பார்த்தும் தானே நான் உன் திவ்ய தரிசனம் காண வந்தேன். ஹே ஆபந்பாந்தவா! அனாத ரட்சகா! உனக்கே அடியவளாக ஆக்கிக் கொண்ட என்னை, ஓர் அரசன் இச்சித்து அடைய நினைப்பது நியாயம் தானா?" இத்தகைய இக்கட்டான நிலையில் இருந்து நீதான் என்னை காக்க வேண்டும்.

திரௌபதியின் மானம் காத்தவரே, மீராபாய்க்கும், ஜனாபாய்க்கும் ஆதரவு அளித்து நின் திருவடியில் இடம் தந்ததைப் போல இப்பாவிக்கும் இடம் தா எனக் கதறி அழுதாள். பக்தையின் துன்பத்தைக் கண்டு பகவான் கானோபாத்ராவின் இச்சைப்படி தன் திருவடியில் அவளை சேர்த்துக் கொள்ள அனுகிரகம் புரிந்தான்.

ஆம் கானோபாத்ராவின் உடலி ருந்து ஓர் திவ்ய ஜோதி விட்டலன் பாதத்தை அடைந்தது. இதை அர்ச்சகர்கள் கண்டனர். அவளது உயிரற்ற உடலோ சன்னிதானத்தில் கிடந்தது. அவளது புண்ய தேகத்தை கோவில் பிரகார சுற்றில் அடக்கம் செய்வித்தனர் அர்ச்சகர்கள்.



வெளியே நின்ற சிப்பாய்களோ கால நேரம் அதிகமானதால் தப்பி எங்கேயாவது ஓடிவிடப்போகிறாள் என நினைத்து உள்ளே சென்று அர்ச்சகர்களிடம் காணோபாத்ராவை பற்றிக் கேட்டனர். பதிலோ சரியாக வரவில்லை. ஆதலால் அர்ச்சகர்களை கைது செய்து அரசனிடம் ஒப்படைத்தனர்.

கடைசியில் காணோபாத்ராவின் பிரேமபக்தியின் மூலமாக ஜோதி மயமாக விட்டலனின் சரணத்தில் ஒன்று கலந்ததை அறிந்த அரசன் தன் தவறான இச்சையை நினைத்து பச்சாதாபப்பட்டு அர்ச்சகர்களுடன் காணோபாத்ரா புதைக்கப்பட்ட இடத்திற்கு வந்தார்.

அவ்விடத்தில் ஓர் அற்புதம் அவளது உடல் புதைக்கப்பட்ட இடத்தில் இருந்து ஓர் செடி ஒன்று வளர்ந்து இருந்ததைக் கண்டு வியந்து இருகரம் கூப்பி வணங்கி நின்றனர். அந்த செடியானது விட்டலனது அருளால் இன்று பெரிய மரமாகி நிற்கிறது. பக்தர்கள் மரத்தை மரமாக காணாது காணோபாத்ராவின் திருவடியாக நினைத்து பாவித்து நமஸ்கரிக் கின்றனர்.

இன்றும் பண்டரிக்கு சென்றால் நாம் அவளது சமாதியை காணலாம். அவளது பிறந்த குலம் தவறானது என்றாலும், பாகவதர்களின் சத்சங்க லாபத்தை காணோபாத்ரா அடைந்ததின் உயரிய லாபமே பகவானின் மீது அவள் கொண்ட பிரேமபக்தியாகும், எனக் கூறி கதையை முடித்தாள் அன்னை.

ஆயி எவருடைய கதையை கூறினாலும் அந்த பாவத்தில் மாறி ஆனந்த நிலையில் இருந்தபடியே கதையைக் கூறுவாள். சில சமயம் கதையைக் கூறும்போதே சமாதி நிலைக்குச் சென்று விடுவாள். ஆயி பாவபக்தியின் வடிவமே ஆவாள். ஆயி கூறிய கதையின் சாராம்சத்தை பாபாவின் அடியவர்கள் கிரகித்துக் கொண்டனர். உடலின் சுகத்தை காட்டிலும் ஆத்ம சுகமே உண்மையான சுகம் என உணர்ந்தனர். அவர்கள் மட்டுமல்ல, நாமும் நன்கு உணர்ந்து கொள்வோம்.

(தொடரும்)

தினை



தினை ஒரு தானிய வகை. இதை மனிதர்களும், விலங்குகளும் உணவாகப் பயன்படுத்துகின்றனர். தினை உலகிலேயே அதிகம் உற்பத்தி செய்யப்படும் தானியங்களில் ஒன்று. இது கிழக்காசியாவில் 10,000 ஆண்டுகளாகப் பயிரிடப் படுவதாகக் கூறப்படுகிறது.

1,06,10,000 டன் தினை உற்பத்தி செய்து உலகளவில் இந்தியா முத லிடம் வகிக்கின்றது. நைச்சீரியா, சீனா போன்ற நாடுகளும் தினை உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன. தினை உலகிலேயே அதிகம் பயிரிடப்படும் இரண் டாவது தானிய வகையாகும்.

தமிழ்க் கடவுள் முருகன் வயதான தோற்றத்துடன் சென்று வள்ளியிடம் சாப்பிட தினை மாவு கேட்டதாகவும், பின் வள்ளியை தி ரு ம ண ம் செ ய் த தா க வு ம் புராணத்தில் கதைகள் உள்ளன. சங்க இலக்கியங்களில் மிகுதியாகக் கூறப்படுவது தினைப்புனமும், தினையும், இதற்கு 'ஏனல்' என்று பெயர்.

இ ை த உயிர்ச்சத்து கொண்ட தானியம் என்று அ ழை க் கி ற ா ர் க ள் . இ ை த சா ப் பி டு வ தா ல் உ ட லு க் கு பலவிதமான நன்மைகள் கிடைக் கும். தினையில் கால்சியம். புரதம், இரும்புச்சத்து, நார்ச்சத்து, மெக்னீசியம் போன்றவை உண்டு. தினைக்கு உள்ள சிறப்பு மற்ற தானியங்களை காட்டிலும் இதில் கால்சியம் அதிகமாக உள்ளது. அரிசி, கோதுமை, கேழ்வரகை காட்டிலும் இதில் இரும்புச்சத்து அதிகமாக உள்ளது.

இதயம் சீராக செயல்பட வைட்டமின் பி 1 அவசியம். இவை தசை மற்றும் நரம்புகளுக்கு இடையில் செய்தியை பரிமாற்ற உதவுவதோடு இதயத்தின் செயல் பாடுகளையும் பாதுகாக்கிறது. இதயத்துக்கு பலம் சேர்க்கும் பி1 வைட்டமின் தினையில் உண்டு தினை அரிசியை எடுத்து கொள்வதால் இதய நோய் வராமல் தடுக்க முடியும்.

உடல் உறுப்புகளுக்கு ஆக்ஸிஜனை சீராக எடுத்து செல் வ த ற் கு ,

இரும்புச்சத்து அவசியம் தேவை.

மூளைக்கு தேவையான ஆக்ஸிஜன் தருவதற்கு தினையில் இருக்கும் புரதமானது நரம்பு மண்டலத்தின் செயல்பாடுகளை ஊக்குவிக்கவும் உதவுகிறது.

தினை குறைந்த க்ளைசெமிக் குறியீட்டை கொண்டுள்ள உணவு. இது நார்ச்சத்து அதிகம் கொண்டது என்பதால் நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற உணவாக இதை சொல்லலாம். பொதுவாக நீரிழிவு பாதிப்பு இருந்தால் அவர்கள் அரிசி உணவை தவிர்க்க வேண்டும். அல்லது அளவாக எடுத்துகொள்ள வேண்டும் என்று சொல்வார்கள். அவர்கள் தினை அரிசியை எடுத்துகொள்ளலாம்.

இது செரிமானத்துக்கு அதிக நேரம் எடுத்துகொள்ளும் என்பதால் அரிசி போன்று உடனடியாக செரித்து அதில் இருக்கும் குளுக்கோஸை ரத்தத்தில் கலப்பதில்லை. நீரிழிவு மட்டும் அல்ல இதய நோய், உடல் பருமன், மூட்டு வலி இருப்பவர்களும் தினை அரிசியை உணவாக எடுத்து கொள்ளலாம். இவை உடல் சோர்வையும் உண்டாக்காது. உடல் இழந்த ஆற்றலை மீண்டும் பெற முடியும்.

இன்று குழந்தைகளும் கால்சியம் பற்றாக்குறை பிரச்சனைக்கு ஆளாகிறார்கள். பெண்களுக்கு இயல்பாகவே மெனோபாஸ் காலங்களில் கால்சியம் பற்றாக்குறை உண்டாகும். தற்போது இது அதிகரித்து வருகிறது. தினை அரிசியில் கால்சியம் சத்து அதிகமாகவே உண்டு என்பதால் இதை அடிக்கடி சேர்த்து வந்தால் எலும்புகள் வலிமையடையும். பற்கள் உறுதியாகும்.

வளரும் குழந்தைகளுக்கு தினை அரிசியை அடிக்கடி உணவில் சேர்ப்பதன் மூலம் எலும்புகள் உறுதியாகும் வளர்ந்த பிறகும் எலும்பு தேய்மானம் உண்டாக்காது. இதில் பீட்டா கரோட்டின் இருப்பதால் கண்பார்வையும் கூர்மை அடையும்.

தினை நரம்பு மண்டலத்தின் செயல்பாடுகளை மேம்படுத்தக் கூடியது.

நரம்புகளுக்கு வலு கொடுத்து முறுக்கேற்றும் குணம் கொண்டது. இளவயது ஆண்களுக்கு அடிக்கடி தினை அரிசியில் செய்த தினை உப்புமா, தினை லட்டு, தினை புட்டு, தினை கஞ்சி , தினை முறுக்கு, தேனுடன் கலந்த தினை என்று விதவிதமாக செய்து கொடுப்பார்கள். இதனோடு தினையை இடித்து தேன் கலந்து களியாக்கி கொடுப்பார்கள். இது ஆண்மையை பெருக்கவும் உதவும்.

தினை கப நோய்களை கட்டுப்படுத்தும் தன்மை கொண்டது. காய்ச்சல் சளி இருக்கும் போது தினை அரிசி கஞ்சி குடித்து வந்தால் அதன் வேகத்தை கட்டுப்படுத்தும். காய்ச்சல் காலங்களில் இவை எப்போதுமே உடலுக்கு நன்மை பயக்கும்.

வாரத்தில் இரண்டு நாள் உணவாக எடுக்கலாம்.

குழந்தைகளுக்கு தினையை தேனுடன் கலந்து உருண்டையாக்கி கொடுக்கலாம். தினை கஞ்சி செய்து குடிக்கலாம். தினை நல்லது என்பதற்காக தினமும் எடுத்துகொள்ள கூடாது. அடிக்கடி எடுத்துகொண்டால் அவை பித்தத்தை அதிகரிக்க செய்யும். ●

ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர்

நமது தத்த பந்துக்கள் அனை வருக்கும் சுந்தர் சாயியின் வணக்கத் துடன் விநாயகர் சதுர்த்தி தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். செப்டம்பர் 7ஆம் தேதி

கலியுகத்தின் முதல் அவதார மாக ஸ்ரீ குரு தத்தாத்ரேயர், ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் என்ற திருநாமத்துடன் 1320 ஆம் ஆண்டில் ஸ்ரீ அப்பல லக்ஷ்மி நரசிம்ம ராஜா மற்றும் அகண்ட லக்ஷ்மி சௌபாக்கியவதி சுமதி மஹாராணி தம்பதியருக்கு ஆந்திராவில் உள்ள கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் உள்ள பிடாபுரம் என்ற இடத்தில் சித்திரை நட்சத்திரத்தில் அவதரித்தார்.

ஸ்ரீ தத்தாத்ரேயர் அளித்த வாக்கின்படி ஒவ்வொரு காலகட் டத்திலும் நம்மை வழிநடத்த, வெவ்வேறு இடங்களில் தம்மை வெவ்வேறு வடிவங்களில் தோற்று வித்துக் கொண்டு, தம் பக்தர்களை அவரிடம் ஈர்த்து அருள்புரிந்து நல்வழிப்படுத்துகிறார்.

ஸ்ரீ குரு தத்தர் கலியுகத்தில் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர், நரசிம்ம சரஸ்வதி, அக்கல்கோட் ஸ்ரீ ஸ்வாமி சமர்த்தர், மாணிக்கப் பிரபு மற்றும் ஷிர்டி ஸ்ரீ சாய்பாபா என்ற பெயர்களில் அவதரித்து இன்றளவும் தம் பக்தர்களை வழிநடத்தி தர்மத்தை நிலைநாட்டி ஆன்மீக முன்னேற்றத்தை ஆசிர்வதிக்கிறார்.

ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் பிறந்தது முதல் குழந்தை வடிவத்திலேயே எந்த ஒரு கல்வியும் பயிற்றுவிக்கும் முன்னரே வேதங்களை முறையாக ஓதி, அதற்குண்டான அர்த்தங்களையும், அதில் அடங்கியுள்ள சூக்ஷ்மங்களை யும், உபநிஷத்களையும் விவரித்து பண்டிதர்கள் அனைவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கினார்.

அத்துடன் எல்லா உயிர் களையும் ஒன்றாக பாவிக்கவும், எளியோரை இழிவு செய்வதையும், பிராமணர்கள் நெறி பிறழ்வதையும் வன்மையாக கண்டித்ததுடன், தூய பக்தி செய்யும் உள்ளங்களைத் தேடி அவர்களிடம் சென்று தன்னு டைய பரிபூரண அன்பையும், ஆசிர்வாதத்தையும் அள்ளி வழங்கினார்.

அவர் சிறு வயதில் செய்த அற்புதங்களே அவரை ஒரு இறை அவதாரமாக காட்டிக் கொடுத்தது. எங்கெல்லாம் தர்மம் மீறப்படுகிறதோ அல்லது பிறப்பால் யாரொருவர் இழிவு செய்யப்படுகிறாரோ அங்கெல்லாம் உடனே தோன்றி எல்லோரையும் நல்வழிப்படுத்தினார். சிலருக்கு அவர்களது முற்பிறப்பை நினைவு படுத்தி பல பிறவிகளில் செய்த தவறுகளைத் திருத்தி தர்மத்தின் பாதையில் செல்ல வழிவகுத்தார்.

தகுதி உள்ளவர்களுக்கு இப்பிர பஞ்சத்தைப் பற்றிய தோற்றத்



தையும் ஆங்காங்கே வாழும் உயிரினங்களையும், அவற்றை ஆட்சி செய்யும் கடவுளர்களையும் பற்றி மிக விரிவாக எடுத்துரைப்பதுடன் கர்மங்களைப் பற்றிய சூட்சும விஷயங்களையெல்லாம் தெளிவு படுத்தினார்.

இந்த பிரபஞ்சம் முழுவதையும் கட்டுப்படுத்தும் ஆதி சக்தியின் வடிவம் நானே என்று தெளிவு படுத்தினார். வெறும் 16 ஆண்டுகள் மட்டுமே தன் குடும்பத்துடன் வாழ்ந்து, மீதி 14 ஆண்டுகள் உலக சஞ்சாரம் செய்து ரிஷி, முனிவர்களுக்கெல்லாம் புதிய யோகா வழிகளை அருள் செய்து, பக்தர்களின் துயர் நீக்க தர்பார் நடத்தியதுடன், தன் சரிதாமிருதத்தை ஒரு பக்தருக்கு தெளிவுபடுத்தி எழுத வைத்து அதை ஆசிர்வாதம் செய்து, கிருஷ்ணா நதியில் இறங்கி ஒளி வடிவில் மறைந்தார்.

பின்னர் 3 ஆண்டுகள் ஒளி வடிவில் சூட்சும வடிவத்தில் வரும் பல உன்னத ஆன்மாக்களுக்கு காட்சியளித்து 33வது வயதில் தன்னை மறைத்துக் கொண்டார்.

அவற்றுள் மிக முக்கியமாக நமது பேரன்பிற்குரிய பிரபஞ்ச சக்தியான ஷிர்டி சாய் அவதாரத்தை நிர்ணயம் செய்து, தன்னுடைய முழுமையான பிரபஞ்ச பேராற்றலையும் அவருக்கு வழங்கி, நம் எல்லோரையும் பேரன் போடு அரவணைத்து, நம் துயரங்களை போக்கி நம்மை நல்வழிப்படுத்தி ஆன்மீக முன்னேற்றம் அளிக்க ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் செய்த ஏற்பாடு பிரமிக்க வைக்கும் ஒரு மஹா பிரசாதம்.

சாயிபாபா அவதாரம் நிகழ்ந்த பின்புதான் மற்ற தத்த அவதாரங்கள் எல்லாமே வெளியுலகத்திற்கு தெரியவரும் என்ற சூட்சுமத்தை வெளிப்படுத்தினார். திசைகளையே ஆடையாய் அணிந்த ஓம் ஸ்ரீ குரு தத்தாத்ரேயரைப் போற்றி அவரது மூல மந்திரத்தை அனுதினம் பாராயணம் செய்வோமாக.


திகம்பரா திகம்பரா!
ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப திகம்பரா!
திகம்பரா திகம்பரா!
ஸ்ரீ சக்ர தத்தாத்ரேயா திகம்பரா!

ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபருக்கு ஸ்ரீ சக்ரதத்தபீடம், ஸ்ரீ சாய் மற்றும் தத்த அவதாரங்களுடன் தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் அருகே மேல்சிறுணை என்கிற இடத்தில் அமைந்துள்ள ஆலயத்திற்கு சென்று அனைவரும் தரிசன பாக்யம் பெறுவோமாக!

ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா.

– உங்கள் சுந்தர் சாய்
(9789404451)

பக்குவம்!



பணம் இருந்தால் உறவுகள் நம்மை விசாரிக்கும், இல்லையெனில் நம்மிடம் பணம் கேட்டு விடுவோமோ என்று ஒதுங்கிக் கொள்ளும்! ஆக உறவுகள் நிலையில்லாதவை என்பதை இல்லாமை தான் கற்றுத் தருகிறது! இது சுயநலமான உலகம்!

ஆனால் பகவான் பாபா நம்மிடம் பணம் இருக்கிறதா? என்று பார்த்து அருள் செய்வதில்லை! ஆனால் நாமோ அதை பெரிதாக நினையாமல், நம்மை புரிந்து கொள்ளாத, பிரிந்துபோகிற அற்ப உறவுகளுக்காக கவலைப்படுகிறோம்.

நம்மை தாங்கும் பாபாவை நினைந்து நிறைவடையாமல், உறவுகளுக்காக கண்ணீர் சிந்துகிறோம்! நம்மை காக்கும் பாபாவிடம் தஞ்சம் அடையாமல், போலி உறவுகளின், அங்கீகாரத்திற்காக ஏங்குகிறோம்!


ஆன்மீக சபையில் கூட நம்மை கௌரவிக்க வேண்டும்,நம் சேவையை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோம்! நான் எவ்வளவு சிறந்த பக்தர் தெரியுமா? என்று பிறரிடம் பறைசாற்ற முயற்சிக்கிறோம்! நம்மை நாமே சிறந்த ஆன்மீகவாதி என்று கருதிக் கொள்கிறோம்!

பதவிகளுக்கும், பொறுப்புகளுக்கும், ஆன்மீகத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை நாம் உணர ஆரம்பிக்கும் போது தான் அன்பு நம்மை வசப்படுத்தும்! பக்குவம் தனது வாசலைத் திறந்து நமக்கான ஞானத்தைத் தர தயாராகும்! ●

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள்



வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.

குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம்	ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம்	ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம்	ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம்	ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம்	ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

சாயி லீலா

மும்பையில் ஷந்தாகுறுஸ் என்ற ஊரை சேர்ந்தவர் ஜோதிந்திர தர்காட் அவர் ஒருமுறை பாபாவை பார்க்க சீரடி துவாரகாமாயிக்கு வந்தார்.

அது ஓர் கோடைகாலம். அது கோடை காலம் என்பதனால் கூடை நிறைய தர்பூசணிகளுடன் ஒரு பெண் விற்பனையாளர் துவாரகாமாயிக்கு அருகில் வந்தார். பாபா அந்த அம்மாவை கூப்பிட்டு அனைத்து தர்பூசணிகளையும் வாங்கினார்.

பின்னர் அனைத்து தர்பூசணி களையும் வெட்டி, துண்டுகள் செய்து, அங்கிருந்த அனைத்து பக்தர்களுக்கும் விநியோகிக்கத் தொடங்கினார். அவர்கள் அனை வரும் தர்பூசணியை ருசித்துக் கொண்டிருந்தனர்.

அங்கே இருந்த ஜோதிந்திர தர்காட் அவர்களுக்கு பாபா ஒரு துண்டு கூட கொடுக்கவில்லை. அ வ ரு ம் அ மை தி யா க உக்காந்து இருந்தார். அந்த நேரத்தில் துவாரகாமாயில் ஒரு பணக்காரர் மனிதர், நன்றாக உடையணிந்து கொண்டு தனது இரண்டு வேலைக்காரர்களுடன் துவாரகாமாயிக்குள் நுழைந்தார்.


அவர் கடுமையான சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டு இருந் தார். எத்தனையோ மருந்து, மாத்திரைகள், உட்க்கொண்டும் அ வ ரி ன் ச ர் க் க ரை நோ ய் குணமடையவில்லை. அப்போது அவரிது நண்பரின் ஆலோசனை யின் பேரில் அவர் சீரடிக்கு விஜயம் செய்து பாபாவை பார்க்க வந்தார்.

அந்த உயர்ந்த மனிதர் பாபா வின் முன் அமர்ந்து கொண்டு இருக்கிறார். பாபா அப்போது ஒரு வேடிக்கையான காரியம் செய்தார்.

பாபா ஒரு தர்பூசணி துண்டை எடுத்து தோலையும் அதன் மேல் உள்ள பழத்தை பிரித்து பழத்தை ஜோதிந்திர தர்காட்க்கும். தர்பூசணியின் தோலை அந்த ப ண க் கா ர ர் ம னி த னு க் கு ம் வழங்கினார்.

உடனே அந்த உயர்ந்த மனிதன் கோபமடைந்து, பாபாவை பார்த்து நான் தோலை உண்பதற்கு மாடோ, ஆடோ இல்லை என்று பதிலளித்தார்.

உடனே பாபா அந்த தர்பூசணி தோலை வாங்கி. ஜோதிந்திர தர்காட் அவர்களிடம் கொடுத்து, "ஏ பாவ், நீ இதை இப்போது சாப்பிடு" என்றார். உடனே



ஜோதிந்திர தர்காட்டும் அந்த தர்பூசணி தோலை கடித்து சாப்பிட்டார்.

பின்பு பாபா நீங்க கொடுத்த இந்த தர்பூசணியின் தோல் வாழைப்பழம் போல மென்மை யாகவும், தர்பூசணியை விட இனிப் பாகவும் இருந்தது என்றும், இவ் வளவு சுவையான தர்பூசணியை தன் வாழ்நாளில் ருசி பார்த்த தில்லை என்று அவர் கூறினார்.

உடனே அந்த இடத்தில் அந்த பணக்காரன் மனிதன் அவமா னப்படுத்தப்பட்டதை உணர்ந்து பாபாவிடம் கேட்ட வந்ததை கேட்காமல் கோபித்துக் கொண்டு அங்கிருந்து சென்று விட்டார்.

தர்கட் 70 வயதில் காலமா னார், அவர் இறக்கும்வரை அவரது வாழ்வில் சர்க்கரை நோய்க் குண்டான எந்த அறிகுறியும் இல்லை.

நீரிழிவு நோய்க்கான ஆசி பெற வந்த அந்த பணக்காரன் மனிதன் பாபாவின் நிரந்தர சிகிச்சையை தவறவிட்டு விட்டார். உண்மையான மருந்து அந்த பொருளில் இல்லை, ஆனால் பாபாவின் அந்த புனிதமான கரங்களிலும், பாபாவின் வார்த்தை களிலும் தான் இருந்தது,

இந்த லீலாவில் இருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம் என்றால்? பாபாவின் லீலைகளை யாராலும், எவராலும், கணிக்க முடியாது. பாபா செய்யும் அற்புதம் அன்றும், இன்றும். சிரிப்பு தனமாக இருக்கலாம். குறும்பு தனமாக இருக்கலாம். விளை யாட்டுதனமாக இருக்கலாம். அதிர்ச்சி தர கூடியதாக சம்பவம் ஆக கூட இருக்கலாம். ஆனால் அவரின் லீலை கடல் போன்றது. இறுதியில் நமக்கு நம்மையில் தான் முடியும்.

நம்பிக்கை, பொறுமை என்ற இரண்டு வார்த்தைகளை நாம் சாதாரணமாக நினைத்து விடக்கூடாது. ஒவ்வொரு விஷயத் திலும் நம்பிக்கை, பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். பாபா நிச்சயம் நம்மை காப்பாற்றுவார். அவரது வார்த்தை என்றுமே பொய் ஆகாது. ●

வாசகர் குரல்...

என் குருவிற்கு மிக்க நன்றி!

சீரடி புனித யாத்திரை கட்டுரையை படித்ததும் நாங்களும் சீரடி யாத்திரை செய்துவந்ததுபோல் இருந்தது. மிக்க நன்றி சாந்தி வெங்கடாச்சலம் அவர்களே! நானும் சீரடி செல்ல சாய்பாபா அருள்புரிய வேண்டும்.

– திருமதி.பி.பானுமதி,
செங்கல்பட்டு.

ஏழாவது ஆண்டு துவக்க விழாவிற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். சாய்சரிதம் பக்கங்களை குறைத்துவிட்டீர்களே சாய்ராம். குறைந்தது பத்து பக்கங்களாவது எழுதவேண்டும் என்பது எனது அன்பான வேண்டுகோள்.

– திரு.சிவசுப்பிரமணியன்.
பந்தநல்லூர்.

ஆசிரியரும், எனது குருவுமான ஸ்ரீராம் பாபா எழுதும் இம்மாத சாய்சரிதத்தில், ஒரு சீடன் எப்படி இருக்க வேண்டும் என்று சாயி பாபாவே வாழ்ந்து காட்டியிருப்பதை படித்து விட்டு ஒரு சில நிமிடங்கள் பக்கங்களை புரட்டாது அப்படியே அமர்ந்து விட்டேன். சாயிலீலாவில் அகஸ்டின் அவர்களின் வாழ்வில் குரு ஸ்ரீராம் பாபா அவர்கள் வந்ததை படித்ததும் சந்தோசமாக இருந்தது. சீரடி யாத்திரை



கட்டுரை அருமை. கேழ்வரகில் உள்ள சத்துக்களை அறிந்து கொண்டு பிரமித்துப் போனேன். இனி கேழ்வரை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொள்வேன். என் குருவிற்கு மிக்க நன்றி!

– திருமதி.ப. இந்துமதி,
அயனாவரம்.

இராதாகிருஷ்ணமாயி பற்றி உங்களின் இதழில் படித்துத்தான் தெரிந்து கொண்டேன். இராதாகிருஷ்ணமாயி பற்றி

தனிப்புத்தகம் இருக்கின்றதா? அய்யா. தங்கள் இதழில் வெளி வரும் அனைத்து செய்திகளும் மிகவும் அருமை! வாழ்த்துக்கள் சாய்ராம்.

– செல்வி. காந்திமதி. மதுரை.

வணக்கம் ஆசிரியர் அவர்களே! நான் தாயுமானவ சுவாமிகளின் பரம பக்தன். தாயுமானவரின் கட்டுரை வெளியிட்டதற்கு மிகவும் நன்றி! ஆசிரியருக்கு ஒரு வேண்டுகோள். தாயுமானவரின் பராபரக்கண்ணிக்கு விளக்கவுரை தங்களின் இதழில் வெளியிட வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள்.

– திரு. நந்தகோபால். திருச்சி.

தங்களின் சாயி மகராஜ் குருவை தேடி இதழ் தற்போது வெளிவரும் ஆன்மீக இதழ்களுக்கு இணையாக எல்லாவகையிலும் மிகச்சிறப்பாக இருக்கின்றது. இதழை தமிழகம் எங்கும் கடைகளில் கிடைக்கும்படி செய்யலாமே!

– திருமதி. சரளா, பாவூர்சத்திரம்.

இம்மாத இதழில் வந்த அனைத்து கட்டுரைகளும் மிக, மிக அற்புதமாக இருந்தது. எதை விடுவது, எதை கூறுவது என்றே தெரியவில்லை. ஏழாம் ஆண்டு துவக்கவிழாவிற்கு எனது குடும் பத்தின் சார்பாக வாழ்த்துக்கள்.

– திருமதி. சரண்யா, அயனாவரம்.

சாய்சரிதம் தொடர் மிக அருமை யாக வந்து கொண்டிருக்கின்றது. வாழ்த்துக்கள். புனிதப் பயணம் கட்டுரை நானும் சீரடி செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை தூண்டியது. கேழ்வரகு பயனுள்ள தகவல்கள். நன்றி!

– திரு. ஆசிரியர் மகேந்திரன். பழனி.

சாய்சரிதம் பழைய, புதிய வாசகர்களுக்கு ஓர் வரபிரசாதம். ஆசிரியரின் சாய்சரிதத்தை புதிதாய் படிக்கும் வாசகர்கள் கொடுத்து வைத்தவர்கள். தெளிந்த நீரோடையாய் கதை செல்கின்றது. எளிய, இனிய தமிழ் நடையில் ஆசிரியரின் கைவண் ணத்தில் சாய்சரிதம் அற்புதமாய் மிளிர்கிறது.

திருமதி. சாந்தி வெங்கடாசலம். மயிலாப்பூர்.

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. பாலகிருஷ்ணன்,அண்ணாநகர் ரூ.3000.

திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.

திரு.சந்திரன். வில்லிவாக்கம்.ரூ.2000.

திருமதி பொன்முருகன் மகாலட்சுமி. மதுரை. ரூ.2000.

திரு. ஜெயதுரை தினகரன் சீனியர் மேலாளர் ரூ.1500

திருமதி. பி. திருமலைச்செல்வி. கொளத்தூர். ரூ.1000.

திருமதி.இராதா கணபதி. வேளச்சேரி. ரூ.1000.

ஸ்ரீ சாய் மகராஜ், சென்னை. ரூ.1000.

திரு. செல்வகணேசன்- நிர்மலா, விநாயகபுரம், சென்னை. ரூ.1000.

திரு.இராஜகோபால். பெங்களூரு. ரூ.1000.

திருமதி. லலிதா. துரைப்பாக்கம்.ரூ.500.

திரு. மாதவன். டி.நகர், ரூ.500.

திருமதி.சாந்தி வெங்கடாசலம். மயிலை. ரூ.500.

திரு. சாய்குமார். அயனாவரம். ரூ.500.

திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.

திருமதி.வாழ்க வளமுடன் சுமதி, கொளத்தூர். ரூ.500.

திருமதி.அபிராமி அசோக். கிசீரி. ரூ.500.

திரு.செல்வவிநாயகம். மணலி.ரூ.500.

திருமதி.சுமதி, கொளத்தூர். ரூ.500.

திருமதி.லதாபாபு. வேப்பம்பட்டு. ரூ.500.

திரு.கருணாமூர்த்தி.அயனாவரம். ரூ.500

திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.

திருமதி. உமா விஜய் ஆனந்த், அயனாவரம். ரூ.400.

திருமதி.உமா மகேஸ்வரி, அயனாவரம். ரூ.300.

திரு.பாலசுப்பிரமணியன், சீரடி. ரூ.216.

திருமதி.பிரியா சுரேஷ், கேரளா. ரூ.201.

திரு. விஜயன்.மனேஜர்,சி.சி பேங்க், கொளத்தூர்.ரூ.200.

திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.

திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட்.கொளத்தூர். ரூ.200.

திருமதி.பிச்சையம்மாள்.பெரம்பூர். ரூ.200.

திரு.சூர்யாகுமார். கேபிள்.டி.வி. மாவுத்தன்பட்டி. ரூ.150.

திரு.மதன் குடும்பத்தார். அயனாவரம். ரூ.101.

திருமதி.திலகா ஷ்யாம் சுந்தர். சென்னை.ரூ.101.

திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.

ஸ்ரீ கணேஷ் கபே, வில்லிவாக்கம். ரூ.101.

திருமதி. பிரியா, அயனாவரம். ரூ.101

திரு.அகஸ்டின் குடும்பத்தார். குன்றத்தூர். அரிசி 1 மூ.

திருமதி. புவனா குடும்பத்தார். அயனாவரம். அரிசி. 1 மூ.

திரு.நடேசன்,நங்கநல்லூர்

குங்குமம் விளம்பர பொது மேலாளர் டீ டிரம் 1

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* **5 வருச சந்தா – ரூ.1000 (தபால் செலவு உள்பட)**
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

- திரு. பிரசாத், பெங்களூர். ரூ.2000.
- திரு. உதி மூர்த்தி, பெரம்பூர். ரூ.1000.
- திரு. சரணவகுமார். சுவாமிமலை. ரூ.400.
- திரு. ஜெயலட்சுமி தேவகுமார். பெரம்பூர்.ரூ.200
- திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.
- திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர் ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.



எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068